தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 280 ஆடி 02
TN-TVL/25/2012-2014
நெல்லை, வெள்ளி, ஜூலை 18, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00




**ஈராக்: வணிக வளாகத்தில் பயங்கர தீவிபத்தில் 60 பேர் உயிரிழப்பு - பலர் படுகாயம்**
...2-ம் பக்கம்

**தூய்மையான நகரங்களின் பட்டியலில் 8-வது முறையாக இந்தூர் நகரம் முதல் இடம்**
...3-ம் பக்கம்

**பெங்களூரு கூட்ட நெரிசலுக்கு ஆர்.சி.பி. அணியே முழு பொறுப்பு: கர்நாடக அரசு அறிக்கை தாக்கல்**
...6-ம் பக்கம்





முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் காணொலி காட்சி வழியாக நடைபெற்றது. இதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், கனிமொழி எம்.பி. மற்றும் மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளில், அடுத்த 30 நாட்களில்

# 2.5 கோடி பேரை தி.மு.க. உறுப்பினர்களாக்குங்கள்

## மாவட்ட செயலாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 18-

**ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் 10 நிமிடங்களாவது தி.மு.க.வினர் கலந்துரையாட வேண்டும் என்று மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், அடுத்த 30 நாட்களில் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் சேர்த்து 2.5 கோடி பேரை கழக உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.**

**முதல்வர் தலைமையில்**

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறுகிறது. தேர்தலை எதிர்கொள்ள ஆளுங்கட்சியான தி.மு.க. முன்கூட்டியே தயாராகி வருகிறது. இந்த நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் காணொலிகாட்சியின் வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார்.

**ஓரணியில் தமிழ்நாடு...**

மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் காணொலி காட்சி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காக்கவும், நம்மோட திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்து சொல்லி தமிழ்நாட்டு மக்களை ஓரணியில் கொண்டுவர வீடு வீடாக போய் பரப்புரை மேற்கொள்ளவும், கழகத்தில் அவர்களை உறுப்பினர்களா சேர்க்கவும், ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பை கடந்த 3-ம் தேதி தொடங்கினோம்.

**கூடுதல் மகிழ்ச்சி...**

தமிழ்நாட்டு மக்களை ஓரணியில் கொண்டுவர மக்களைத் தேடி வீடு வீடாகச் செல்கிறோம் என்பது மகிழ்ச்சி. செல்லும் இடங்களில் எல்லாம் மக்களின் வரவேற்பு நன்றாக உள்ளது என கேள்விப்படும் போது கூடுதல் மகிழ்ச்சியாக உள்ளது. ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் உழைக்கும் ஒவ்வொரு கழக உடன்பிறப்புக்கும் என் தலை தாழ்ந்த வணக்கம்; நன்றி.

**உறுதி செய்திட...**

நமக்கு இன்னமும் 30 நாள் இருக்கிறது. எண்ணிக்கைக்கு நாம் கொடுக்கும் அதே அளவு முக்கியத்துவத்தை ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் 10 நிமிடங்களாவது நம் கழகத்தினர் கலந்துரையாடுவதை நாம் உறுதி செய்திட வேண்டும். மத்திய பா.ஜ.க. அரசு மற்றும் அதன் கூட்டணியாக இயங்கிக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள், தமிழ்நாட்டுக்கு இழைத்துள்ள – இழைக்க உள்ள அநீதியை ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் எடுத்து சொல்வதுதான் இந்த முன்னெடுப்பின் நோக்கம்.

**முழுமையாக ஆய்வு...**

அடுத்த 30 நாட்களில் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் சேர்த்து 2.5 கோடி பேரை கழக உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும். நாம் உருவாக்கியிருக்க பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள் கழகத்துக்கு மிகப்பெரிய சொத்து. அவங்களை எதிர்வரும் சட்டன்றத் தேர்தலுக்கும் – தேர்தலை கடந்தும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவரை இணைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் விவரங்கள் முழுமையாக ஆய்வு செய்யப்படுகிறது. எந்தெந்த வாக்குச்சாவடிகளில் நாம் வழங்கிய நடைமுறையை சரியாக கடைபிடிக்கவில்லையெனில் அங்கெல்லாம் மீண்டும் முதலில் இருந்து தொடங்குவோம். இவ்வாறு அவர் கூறினார்.

> **தமிழக முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதள பதிவில், 'உறவென விருந்தோம்பல் வழங்கி, ஓரணியில் தமிழ்நாடு எனக் கைகோக்கும் குடும்பங்கள். எனது கணவர் மாற்றுக்கட்சியில் கிளைச் செயலாளர். அவரைத் தவிர எங்கள் குடும்பத்தில் உள்ள எல்லோரையும் தி.மு.க.,வில் இணைத்துக் கொள்கிறோம் எனக் கரூர் மாவட்டத்தில் நிகழ்ந்தது, தமிழ்நாட்டின் உணர்வாகி, உடன்பிறப்புகள் பெருக வேண்டும் என மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தினேன் எனத் தெரிவித்துள்ளார்.**
> **-முதல்வர் மு.க.ஸ்டாலின்**

# காமராஜர் விவகாரத்தில் வீண் விவாதங்களை தவிர்ப்போம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை, ஜூலை 18-

**பெருந்தமிழர் காமராஜர் குறித்துப் பொதுவெளியில் சர்ச்சைக்குரிய விவாதங்கள் நடப்பது சரியல்ல என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், கலகமூட்டிக் குளிர்காய நினைக்கும் தீயவர்களின் எண்ணத்துக்கு இடம் கொடுக்காதீர் என்றும் காமராஜர் விவகாரத்தில் வீண் விவாதங்களைத் தவிர்ப்போம் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**பல்வேறு கட்சிகள்...**

சென்னை பெரம்பூரில் நடைபெற்ற தி.மு.க.பொதுக் கூட்டத்தில் பேசிய திருச்சி சிவா எம்.பி, காமராஜர் ஏசி அறை இல்லாமல் தூங்கமாட்டார் என்றும், அவர் இறப்பதற்கு முன்பு கருணாநிதியின் கையை பிடித்துக்கொண்டு நாட்டையும் ஜனநாயகத்தையும் நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும் என்றும் கூறியதாக பேசி இருந்தார். திருச்சி சிவாவின் பேச்சு, அரசியல் களத்தில் மட்டுமல்லாமல் பொதுத் தளத்திலும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அவரது பேச்சுக்கு அ.தி.மு.க., பா.ஜ.க., நா.த.க. உள்ளிட்ட பல கட்சிகள் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டன.

**முதல்வர் வேண்டுகோள்**

இந்த சூழலில் தன்மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு திருச்சி சிவா விளக்கம் அளித்து அறிக்கை வெளியிட்டிருந்தார். இந்நிலையில் கலகமூட்டிக் குளிர்காய நினைக்கும் தீயவர்களின் எண்ணத்துக்கு இடம் கொடுக்காதீர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- கலகமூட்டிக் குளிர்காய நினைக்கும் தீயவர்களின் எண்ணத்துக்கு இடம் கொடுக்காதீர்! பெருந்தலைவர் காமராசரைப் 'பச்சைத்தமிழர்' என்று போற்றியவர் தந்தை பெரியார்.

**மகன் போல நின்று...**

குடியாத்தம் இடைத்தேர்தலில் பெருந்தலைவர்க்கு எதிராக வேட்பாளரை நிறுத்த வேண்டாம் என முடிவெடுத்தவர் பேரறிஞர் அண்ணா. பெருந்தலைவர் மறைந்த போது ஒரு மகன் போல நின்று இறுதி மரியாதை ஏற்பாடுகளைச் செய்து, நினைவகம் அமைத்து, அவரது பிறந்தநாளைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தவர் தமிழினத் தலைவர் கலைஞர். உடல் நலிவுற்ற நிலையிலும் எனது திருமணத்துக்கு நேரில் வந்து பெருந்தலைவர் வாழ்த்தியது என் வாழ்நாளில் கிடைத்தற்கரிய பெரும்பேறு.

**விவாதங்கள் சரியல்ல...**

அத்தகைய பெருந்தலைவர், பெருந்தமிழர் குறித்துப் பொதுவெளியில் சர்ச்சைக்குரிய விவாதங்கள் நடப்பது சரியல்ல. மரியாதைக்குரிய தலைவர்களின் மாண்பைக் காக்கும் வகையில்தான் எந்தக் கருத்தும் பகிரப்பட வேண்டும். சமூகநீதியையும் மதச்சார்பற்ற நல்லிணக்கத்தையும் உருவாக்க வாழ்நாளெல்லாம் உழைத்த பெருந்தலைவரின் கனவுகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம். வீண் விவாதங்களைத் தவிர்ப்போம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சாதி அடிப்படையில் யாராவது

# கோவிலுக்குள் நுழைவதை தடுத்தால் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை

## காவல்துறைக்கு உயர் நீதிமன்றம் முக்கிய அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 18-

**சாதி அடிப்படையில் கோவிலுக்குள் நுழைவதை தடுப்போருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் தாலுகா, புதுக்குடி எனும் கிராமத்தில் உள்ள அய்யனார் கோவிலில் பட்டியலினத்தவர்களால் நிறுவப்பட்ட சிலைகளை ஒரு பிரிவினர் இடித்து தள்ளிவிட்டதாகவும், கோவிலில் அமைக்கப்பட்டுள்ள பெரிய இரும்பு கதவுக்கு பின்னிருந்துதான் சாமி தரிசனம் செய்ய பட்டியலினத்தவர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் கூறி வெங்கடேசன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், ஜூலை 16-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை நடைபெற உள்ள தேர்த் திருவிழாவில் பட்டியலினத்தவர்கள் பங்கேற்கவும், கோவிலுக்குள் நுழைய அனுமதிக்கவும் உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், சட்டத்தின் ஆட்சி நடக்கும் நாட்டில் சாதி ரீதியான பாகுபாட்டை அனுமதிக்க முடியாது எனக் கூறி, புதுக்குடி அய்யனார் கோவிலுக்கு பட்டியலின மக்கள் செல்வதை யாரும் தடுக்கவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும் என அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டார்.

மேலும், கோவிலில் அனைத்து தரப்பு மக்களும் தரிசனம் செய்வதையும், விழாக்களில் பங்கேற்பதையும் உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் வருவாய் கோட்டாட்சியருக்கும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். பல்வேறு தலைவர்களின் நீண்ட போராட்டத்துக்குப் பிறகு ஆலய நுழைவுச் சட்டம் இயற்றப்பட்டது.

இந்த சட்டத்தை அமல்படுத்த வேண்டியது அதிகாரிகளின் கடமை எனக் குறிப்பிட்ட நீதிபதி, சாதி அடிப்படையில் கோவிலுக்குள் நுழைவதை யாரேனும் தடுத்தால், அவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று காவல் துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

### திருப்புவனம் காவலாளி மரண வழக்கு:

# 5 பேருக்கு சி.பி.ஐ. சம்மன்

சிவகங்கை, ஜூலை 18-

**மடப்புரம் காவலாளி மரண வழக்கில் 5 பேருக்கு சி.பி.ஐ. சம்மன் அனுப்பி உள்ளது.**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தை அடுத்த மடப்புரம் கோவிலில் தனியார் ஒப்பந்த காவலாளியாக வேலை பார்த்து வந்தவர், அஜித்குமார் (வயது 29). நிகிதா என்ற பேராசிரியை அளித்த நகை மாயம் புகார் தொடர்பாக மானாமதுரை தனிப்படை போலீசார் தாக்கியதில் அஜித்குமார் இறந்தார். தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த வழக்கு சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றப்பட்டது. கடந்த 3 நாட்களாக சி.பி.ஐ. அதிகாரிகள் மதுரை, மடப்புரம், திருப்புவனம் உள்ளிட்ட பகுதிகளில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அஜித்குமார் மரணமடைந்த விவகாரம் தொடர்பாக மடப்புரம் உதவி ஆணையர் அலுவலகத்தில் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் உதவி ஆணையரின் ஓட்டுநர் கார்த்திக் வேல், பிரவீன் குமார், ஆட்டோ ஓட்டுநர் அருண்குமார், செக்யூரிட்டி வினோத் குமார் மற்றும் நவீன் குமார் ஆகியோர் விசாரணைக்கு ஆஜராகுமாறு சி.பி.ஐ. அதிகாரிகள் சம்மன் அனுப்பி உள்ளனர்.

### திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட

# 12 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஜூலை 18-

**தமிழகத்தில் இன்று (ஜூலை 18) நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி, தென்காசி, செங்கல்பட்டு, திருவள்ளூர், சென்னை, ராணிபேட்டை, காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.**

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்னிந்திய பகுதிகளின் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. மேலும் தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் வரும் 23-ம் தேதி வரை 6 நாட்கள், ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஒரிரு இடங்களில் மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்தில் தரைக்காற்று வீசக்கூடும்.

தமிழகத்தில் இன்று (ஜூலை 18) நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி, தென்காசி, செங்கல்பட்டு, திருவள்ளூர், சென்னை, ராணிபேட்டை, காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. 19, 20 ஆகிய தேதிகளில் நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி, திண்டுக்கல் மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

21-ம் தேதி நீலகிரி, தேனி மற்றும் கோவை மாவட்டத்தின் மலை பகுதிகளிலும், 22-ம் தேதி நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலை பகுதிகளிலும் ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 97 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 80 டிகிரி ஃபாரன் ஹீட் செல்சியஸை ஒட்டியும் இருக்கக் கூடும் என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### 4 கோடி ரூபாய் பிடிபட்ட வழக்கு:

# சி.பி.சி.ஐ.டி. விசாரணையில் பரபரப்பு தகவல்

சென்னை, ஜூலை 18-

**ரூ.4 கோடி பிடிபட்ட வழக்கு தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. விசாரணையில் பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.**

தமிழகத்தில் நடந்து முடிந்த மக்களவை தேர்தலின்போது, சென்னை-நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் ரூ.4 கோடி பணம் கொண்டு செல்லப்பட்ட தகவலையறிந்து பறக்கும்படையினர் தாம்பரம் ரெயில் நிலையத்தில் அந்த ரயிலை நிறுத்தி சோதனை நடத்தினர். இந்த சோதனையில் சிக்கிய கணக்கில் வராத ரூ.4 கோடி பணத்தை பறிமுதல் செய்தனர்.

இந்த பணத்தை எடுத்து வந்திருந்த 3 பேரை தாம்பரம் போலீசார் கைது செய்தனர். விசாரணையில் ரூ.4 கோடி பணம் நெல்லை மக்களவை தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளராக போட்டியிட்ட நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமானது என்ற தகவல் வெளியானது.

இதைத்தொடர்ந்து இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. போலீஸார் வசம் ஒப்படைக்கப்பட்டது. நயினார் நாகேந்திரன், பா.ஜ.க. நிர்வாகி கேசவ விநாயகம் உள்பட 25 பேரை சி.பி.சி.ஐ.டி போலீஸார் தங்கள் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வந்தனர். சம்மன் அனுப்பியும் விசாரணை நடத்தினார்கள்.

இந்த நிலையில், பா.ஜ.க. நிர்வாகிகள் எஸ்.ஆர்.சேகர், கேசவ விநாயகம், கோவர்தன் ஆகியோர் தேர்தலின்போது தமிழக மேலும் பா.ஜ.க. நிர்வாகி கோவர்தன், ஓட்டுநர் விக்னேஷ் மூலமாக தங்கக் கட்டிக்கு பதிலாக கைமாற்றியது விசாரணையில் தெரிய வந்ததாக நீதிமன்றத்தில் சி.பி.சி.ஐ.டி. விளக்கம் அளித்துள்ளனர்.

ரூ.97.92 லட்சம் பணத்தை கைமாற்ற ஹவாலா தரகர் சூரஜ் உதவியது கால் டேட்டா ரெக்கார்ட் மூலம் உறுதியாகியுள்ளது.




# இந்தியாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம்: ட்ரம்ப்

**வாஷிங்டன், ஜூலை 18-**

இந்தியாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். குறிப்பாக பல்வேறு நாடுகள் மீதும் அதிரடியாக வரிகளை விதித்தார். கடந்த ஏப்ரல் மாதம் சுமார் 100-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான வரி விகிதங்களை ட்ரம்ப் வெளியிட்டார். இதனால் உலகம் முழுவதும் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டது. அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின் பங்குச் சந்தைகளில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

இதன்காரணமாக அமெரிக்க அரசின் வரி விதிப்பு திட்டம் கடந்த 9-ம் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது. இந்த கால அவகாசம் தற்போது, ஆகஸ்ட் 1-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டு உள்ளது. இந்த சூழலில் 14 நாடுகளுக்கான புதிய வரி விகிதங்களை அமெரிக்கா கடந்த வாரம் வெளியிட்டது. இதன்படி ஜப்பானுக்கு 25 சதவீதம், வங்கதேசத்துக்கு 35 சதவீதம் விதிக்கப்பட்டது. இந்த பட்டியலில் இந்தியா இடம்பெறவில்லை. முன்னதாக கடந்த ஏப்ரலில் வெளியிட்ட அறிவிப்பின்போது இந்தியா மீது 26 சதவீத வரி விதிக்கப்பட்டது. இந்தியாவுடன் வரி விவகாரத்தில் ஒப்பந்தம் ஏற்படுத்துவது தொடர்பாக இரு நாட்டு அதிகாரிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இந்த நிலையில், இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுவதில் நெருங்கிவிட்டோம் என்று ட்ரம்ப் கூறியுள்ளார். இதனால் இருநாடுகளுக்கும் இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் எனத்தெரிகிறது.

# அமெரிக்காவின் அலஸ்காவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்..!

**வாஷிங்டன், ஜூலை 18-**

அமெரிக்காவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

அமெரிக்காவின் அலஸ்கா மாகாணத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவில் 7.3 ஆக பதிவான நிலநடுக்கத்தால் அங்குள்ள மக்கள் பீதி அடைந்தனர். உள்ளூர் நேரப்படி 12.37 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தை தொடர்ந்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பசிபிக் கடல் பகுதியில் அமைந்துள்ள அலஸ்கா மாகாணம் நிலநடுக்கங்கள் அடிக்கடி ஏற்படக்கூடிய ரிங்க் ஆப் பயர் என்ற இடத்தில் அமைந்து உள்ளது. இதனால், இங்கு அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுவது வழக்கமான ஒன்றாக பார்க்கப்படுகிறது. எனினும், சமீப காலமாக சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்படுவது மக்களை பீதி அடையவைத்து இருக்கிறது. கடந்த 1964 ஆம் ஆண்டு ரிக்டர் அளவில் 9.2 என்ற அளவுக்கு நிலநடுக்கம் அலஸ்காவில் ஏற்பட்டது. அமெரிக்க வரலாற்றில் ஏற்பட்ட மிகவும் சக்தி வாய்ந்த நிலநடுக்கமாக இது அமைந்தது. இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து அலஸ்காவின் வளைகுடா மற்றும் ஹவாய், அமெரிக்க மேற்கு கடற்கரை பகுதிகளை சுனாமி தாக்கியது.

### ராணுவ தலைமையகம் மீது குண்டு வீச்சு:

# இஸ்ரேலுக்கு சிரியா எச்சரிக்கை

**டமாஸ்கஸ், ஜூலை 18-**

சிரியாவில் ஸ்விடா மாகாணத்தில் ட்ரூஸ் மதத்தினருக்கும், பெடொய்ன் பழங்குடியினருக்கும் இடையே மோதல் வெடித்தது. இதையடுத்து ஸ்விடா மாகாணத்துக்கு கூடுதல் அரசுப்படைகள் அனுப்பப்பட்டன. இதில் ட்ரூஸ் மதத்தினர் மீது அரசுப்படைகள் தாக்குதல் நடத்தி வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதற்கிடையே ட்ரூஸ் மதத்தினருக்கு ஆதரவாக இஸ்ரேல், சிரியா மீது தாக்குதல் நடத்தியது. சிரியாவின் ராணுவ தலைமையகம் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் அதிரடி தாக்குதல் நடத்தி உள்ளது. தலைநகர் டமாஸ்கசில் உள்ள சிரியா ராணுவ தலைமையக கட்டிடம் மீது இஸ்ரேல் விமானப்படை ஏவுகணையை வீசியது. இந்த நிலையில் இஸ்ரேலுக்கு சிரியாவின் இடைக்கால அதிபர் அகமது அல்-ஷாரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் கூறும்போது, "போருக்கு அஞ்சுபவர்கள் நாங்கள் இல்லை. சவால்களை எதிர்கொண்டு எங்கள் மக்களைப் பாதுகாப்பதில் எங்கள் வாழ்க்கையை செலவிட்டுள்ளோம். சிரியா மக்களின் கண்ணியத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் போராடத் தயாராக இருக்கிறோம். பொதுமக்களை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி உள்ளது என்றார்.

### குற்றச்செயலில் ஈடுபட்டால் விசா ரத்து:

# அமெரிக்க தூதரம் கடும் எச்சரிக்கை

**நியூயார்க், ஜூலை 18-**

குற்றச்செயலில் ஈடுபட்டால் விசா ரதது செய்யப்படும் என்று அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்காவில் உள்ள டார்க்கெட் டிபார்ட்மென்ட் ஸ்டோரில் இந்திய பெண் ஒருவர் சுமார் 7 மணிநேரம் பொருட்களை வாங்குவது போல நடித்துள்ளார். பிறகு, சுமார் ரூ.1.10 லட்சம் மதிப்பிலான பொருட்களை திருடிக் கொண்டு, அங்கிருந்து வெளியேற முயன்றுள்ளார். இதை கண்டறிந்த ஊழியர்கள் உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளார். விரைந்து வந்த போலீசார், அந்தப் பெண்ணிடம் விசாரணை நடத்தினர். அப்போது, தான் எடுத்து வந்த பொருட்களுக்கு பணம் செலுத்த அந்தப் பெண் தயாராக இருந்த போதும், போலீசாருக்கு அவருக்கு கைவிலங்கிட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர்.

கடந்த மே 1ம் தேதி நடந்த இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில், குற்ற செயல்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களின் விசா ரத்து செய்யப்படும் என்று இந்தியாவுக்கான அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து விடுத்துள்ள எக்ஸ் தளப்பதிவு:-

அமெரிக்காவில் திருட்டு, கொள்ளை, தாக்குதல் போன்ற குற்ற செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், விசாவும் ரத்து செய்யப்படும். எதிர்காலத்தில் அமெரிக்கா நுழைவதற்கான விசாவை பெறும் தகுதியை இழக்க நேரிடும். அமெரிக்காவின் சட்டம் மற்றும் ஒழுங்கை வெளிநாட்டவர்களும் மதித்து, கடைபிடிக்க வேண்டும், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்கதேசத்தில் மோதல்: 4 பேர் பலி

**டாக்கா, ஜூலை 18-**

வங்கதேசத்தில் ஷேக் ஹசீனா ஆதரவாளர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் 4 பேர் உயிரிழந்தனர், 50-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

வங்கதேசத்தின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவுக்கு எதிராக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மாணவர்கள் நடத்திய போராட்டம் காரணமாக அவர் தனது பதவியை இழந்து, அங்கிருந்து தப்பி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அமைப்பு சார்பில், நோபல் பரிசு பெற்ற முகம்மது யூனுஸ் இடைக்கால தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மாணவர்கள் பலர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர். வங்கதேசத்தின் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய இந்த நிகழ்வு ஓராண்டை நிறைவு செய்ய உள்ளதை முன்னிட்டு, மாணவர்களின் அரசியல் கட்சியான தேசிய குடிமக்கள் கட்சி சார்பில் இந்த மாதத்தில்( ஜூலை ) நாட்டின் பல்வேறு பகுதிகளில் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, இன்று கோபால் கஞ்ச் நகரில் பேரணி நடத்தப்பட்டது.

ஷேக் ஹசீனாவின் மூதாதையர்கள் வாழ்ந்த நகரமான இது, அவாமி லீக் கட்சியின் கோட்டையாகக் கருதப்படுகிறது. இந்நிலையில், நேற்று காலை பலத்த பாதுகாப்புடன் பேரணி தொடங்கியது. அப்போது, அவாமி லீக் கட்சியினர், வன்முறையில் ஈடுபட்டனர். பல்வேறு வாகனங்களுக்குத் தீ வைத்த அவர்கள், போலீஸார் மீது தாக்குதல்களை நடத்தினர். அப்போது, இரு தரப்புக்கும் இடையே நடந்த மோதலில் 4 பேர் கொல்லப்பட்டனர். 50-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். வன்முறையை அடுத்து, மாணவர் தலைவர்கள் காவல் நிலையங்களுக்குள் தஞ்சம் புகுந்தனர். பலர், போலீஸ் பாதுகாப்புடன் அண்டை மாவட்டங்களுக்கு விரைந்தனர்.

### மரணமடைந்தவர்களின்

# 1.17 கோடி ஆதார் எண்கள் முடக்கம்

**டெல்லி, ஜூலை 18-**

1.17 கோடி ஆதார் எண்கள் முடக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆதார் எண்களை முறைகேடுகளுக்கு பயன்படுத்துவதை தடுக்க இறந்தவர்களின் குடும்பத்தினரே இறப்புச் சான்று மூலம் அவர்களின் ஆதாரை முடக்க விண்ணப்பிக்கலாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இறப்புப் பதிவுகளை மாநிலங்களிடம் இருந்து சேகரித்து, 1.17 கோடி மரணமடைந்தவர்களின் ஆதார் எண்கள் முடக்கபட்டுள்ளது. இறந்தவர்களின் ஆதார் எண்களை முறைகேடுகளுக்கு பயன்படுத்துவதை தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இறந்தவர்களின் குடும்பத்தினரே இறப்புச் சான்று மூலம் அவர்களின் ஆதாரை முடக்க விண்ணப்பிக்கலாம் எனவும் ஆதார் ஆணையம் தெரிவித்துள்ளது.

# ஈராக்: வணிகவளாகத்தில் தீவிபத்து; 60 பேர் உயிரிழப்பு - பலர் படுகாயம்



**பாக்தாத், ஜூலை 18-**

ஈராக்கில் வணிக வளாகத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 60 பேர் உயிரிழந்த நிலையில் பலர் காயமடைந்தனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஈராக்கின் அல் குட் நகரத்தில் உள்ள வணிக வளாகம் ஒன்றில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. 5 மாடிகள் கொண்ட அந்த வணிக வளாக கட்டிடத்தில் தீ பிடித்ததால், வணிக வளாகத்திற்கு வந்து இருந்த மக்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். இந்த பயங்கர தீ விபத்தில், 60 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஈராக் ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன. பலர் காயம் அடைந்து இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளது. இந்த தீ விபத்திற்கான காரணம் குறித்து இன்னும் தெரியவில்லை.

# அரியானாவில் 2 முறை நிலநடுக்கம்

**சண்டிகர், ஜூலை 18-**

அரியானாவில் அடுத்தடுத்து 2 முறை நிலநடுக்கம் ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. அரியானாவில் உள்ள ஜஜ்ஜார் பகுதியில் நேற்று மதியம் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. மதியம் 12.34 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 2.5 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 5 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 28.64 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 76.75 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கம் லேசாக பதிவானதால் எந்தவொரு சேதமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் டெல்லியிலும் உணரப்பட்டதால் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. முன்னதாக அரியானாவின் ரோஹ்தக் பகுதியில் அதிகாலை 12.46 மணியளவில் ரிகடர் 3.3 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. ஒரே நாளில் அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்டதன் காரணமாக அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

# பாகிஸ்தானில் கனமழைக்கு 124 பேர் பலி

**இஸ்லாமாபாத், ஜூலை 18-**

பாகிஸ்தானில் கனமழைக்கு இதுவரை 124 பேர் உயிரிழந்தனர்.


பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக பருவமழை தீவிரமடைந்து வருகிறது. குறிப்பாக பஞ்சாப், கைபர் பக்துவா, சிந்து, பலூசிஸ்தான் உள்ளிட்ட மாகாணங்களில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளக்காடாக மாறின. இதில் 3 வீடுகள் இடிந்து விழுந்தன. எனவே கட்டிட இடிபாடு மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி சுமார் 116 பேர் பலியாகி இருந்தனர். 150-க்கும் மேற்பட்டோருக்கு படுகாயம் ஏற்பட்டது.

அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் சிகிச்சை பலனின்றி மேலும் 8 பேர் பலியாகினர். இதனால் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 124-ஆக உயர்ந்துள்ளது.

கனமழையால் வீடுகளை இழந்த பலரும் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவி வருகிறது.




**18-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம் :** -- புதிய வியாபார விரிவாக்க விவகாரங்களில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் சுலபமாக கிடைக்கும். அதன் காரணமாக முன்னேற்றம் காண்பர். பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும்.

**ரிஷபம் :** -- நல்லபடியாக உங்கள் ஆரோக்கியத்தைப் பேண வேண்டிய நாள். வாகனங்களை வெளியில் எடுக்கும் முன் அனைத்து பாகங்களையும் சோதித்து பார்த்து, எடுப்பது நல்லது.

**மிதுனம் :--** அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் சாதகமான பதில்களை பெறுவர். கடினமான பணியை கூட சுலபமாக முடித்து விடுவார்கள். தனலாபமும், எல்லா வகையிலும் நன்மையும் ஏற்படும்.

**கடகம் :-** எல்லாக் காரியங்களும் அனுகூலமாகும். அரசிடம் எதிர்பார்க்கும் சலுகைகள் அனைத்தும் தடையின்றி கிடைக்கும். புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**சிம்மம் :--** மனைவியின் மனம் மகிழ, மலையை கூட அசைத்து விடுவார்கள். மழலைச் செல்வங்கள், மடியில் போட்டுக் கொஞ்சும் நாள் விரைவில் வரலாம். தெய்வீகக் காரிய ஈடுபாடு, தான தருமசிந்தனை ஏற்படும்.

**கன்னி :--** எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். அனைவருக்கும் நன்மை செய்யும் எண்ணத்தைக் கைக்கொள்வது நல்லது. பெண்ணால் குடும்பத்தில் கலகம் உருவாகலாம்.

**துலாம் :--** மிகவும் பிரபலமான நபருடன் நட்பு உருவாகும். பல முனைகளில் இருந்து பணவரவு அதிகரிக்கும். காதல் வலையில் விழ நேரலாம். மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும்.

**விருச்சிகம் :--** புதிய வாகனம் வாங்க நினைக்கும், உங்கள் எண்ணங்கள் ஈடேறும். அதன் காரணமாக புதிய உற்சாகங்கள் பொங்கும். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும் நாள்.

**தனுசு :--** அதிகாரிகளிடம் பேசும்போது, அதிர்ந்து பேசாமல், அமைதியாக பேசுவது, உயர்வுக்கு வழிவகுக்கும். சுயநம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும்.

**மகரம் :--** தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். வழக்கு விவகாரங்களில் சிக்கல்களை சந்திக்க நேரும். உடல் நிலையில் அக்கறை தேவை, தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கவேண்டிய நாள்.

**கும்பம் :--** பணியில் கூடும் சம்பள உயர்வால், சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். வேலை பார்க்கும் இடத்தில் உங்கள் மதிப்பு உயரும். அதிகரிகளின் பாராட்டும் கிடைக்கும்.

**மீனம் :--** தேவையற்ற பழிகளைச் சுமக்காமல் இருக்கக் குடும்பத்தாரிடம் பேசும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் பேசவும். கவனமாக படித்தால் தடைகளைத் தகர்த்தெரியலாம்.

### உத்திரமேரூரில் ஆர்ப்பாட்டம்:

# பா.ம.க., வி.சி.க. அ.தி.மு.க. கூட்டணியில் இருந்த கட்சிகள்தான்: வைகைச்செல்வன்



**காஞ்சிபுரம், ஜூலை 18-**

"பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகளெல்லாம் ஏற்கெனவே அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்த கட்சிகள் தான் என்று அ.தி.மு.க. இலக்கிய அணிச் செயலர் வைகைச் செல்வன் தெரிவித்துள்ளார்.

உத்திரமேரூரில் அ.தி.மு.க. சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அ.தி.மு.க. இலக்கிய அணிச் செயலர் வைகைச் செல்வன் தலைமை தாங்கி பேசினார். உத்திரமேரூரில் அ.தி.மு.க. சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இதில் மாவட்டச் செயலர் வி.சோம சுந்தரம், மாநில அமைப்புச் செயலர்கள் வாலாஜாபாத் பா.கணேசன், மைதிலி திருநாவுக்கரசு, ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட அனைவரையும் உத்திரமேரூர் நகர செயலர் ஜெய விஷ்ணு வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழக அரசையும், உத்திரமேரூர் பேரூராட்சி நிர்வாகத்தையும் கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. உத்திரமேரூர் பேரூராட்சியில் சொத்து வரி, குடிநீர் வரி, தொழில் வரி ஆகியவை உயர்த்தப்பட்டுள்ளதாகவும், ஆனால் சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகல் கூட செய்து தரவில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டது.

இக்கூட்டத்துக்கு பின் பேசிய வைகைச் செல்வன், "பொது எதிரியை வீழ்த்த தான் கூட்டணி. பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள் போன்றவை ஏற்கனவே அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்த கட்சிகள் தான். 7 மாதத்தில் திமுக ஆட்சி முடிவடையும். அதன் பின்னர் சூழலுக்கு ஏற்ப கூட்டணி அமைப்போம்". என்றார்.

# ராபர்ட் வதேராவின் சொத்துகள் பறிமுதல்

**டெல்லி, ஜூலை 18-**

ராபர்ட் வதேராவின் ரூ.36 கோடி சொத்தை அமலாக்கத்துறையினர் பறிமுதல் செய்தனர்.

குருகிராம் நில பேர வழக்கில் ராபர்ட் வதேரா மற்றும் அவரது நிறுவனங்களுடன் தொடர்புடைய ரூ. 6 கோடி சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ரூ.36 கோடி மதிப்பிலான 43 சொத்துகளை அமலாக்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். தொழிலதிபரும் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா கணவருமான ராபர்ட் வதேராவிடம் ஏப்ரலில் விசாரணை நடத்திய நிலையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### வரிவிதிப்பு முறைகேடு விவகாரம்:

# ஐ.பி.எஸ். அதிகாரி தலைமையில் சிறப்புக்குழு: ஐகோர்ட்டு உத்தரவு

**மதுரை, ஜூலை 18-**

மதுரை மாநகராட்சி விரிவிதிப்பில் முறைகேடு தொடர்பான வழக்கை ஐ.பி.எஸ். அதிகாரி தலைமையிலான சிறப்பு குழு விசாரணைக்கு மாற்றி உயர் நீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி 83வது வார்டு அ.தி.மு.க. கவுன்சிலர் ரவி, உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், 'மதுரை மாநகராட்சியில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளுக்கு முறையான வரி செலுத்தாமல் முறைகேடு நடைபெற்றது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இந்த முறைகேட்டால் மதுரை மாநகராட்சிக்கு ரூ.200 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த முறைகேட்டில் ஆளும் கட்சியினருக்கு தொடர்பு இருப்பதால் குற்றப்பிரிவு போலீஸார் சரியாக விசாரணை நடத்தமாட்டார்கள். எனவே, மதுரை மாநகராட்சி சொத்து வரி விதிப்பு முறைகேடு வழக்கு விசாரணையை மாற்றி உத்தரவிட வேண்டும்' இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரிய கிளாட் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், மாநகராட்சி ஆணையரின் புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து குற்றப்பிரிவு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் மகேந்திரன் வாதிடுகையில், ரூ.200 கோடி அளவுக்கு முறைகேடு நடைபெற்றுள்ளது. இந்த முறைகேட்டில் தொடர்பு இருப்பதால் தான் மண்டல தலைவர்கள், குழு தலைவர்களிடம் ராஜினாமா பெறப்பட்டுள்ளது. இதனால் விசாரணையை மாற்ற வேண்டும் என்றார்.

பின்னர் நீதிபதிகள், வரி விதிப்பில் முறைகேடு நடந்திருப்பதாக மாநகராட்சி ஆணையரே புகார் அளித்துள்ளார். ஆணையரின் புகாரை எளிதாக கையாள முடியாது. இந்த முறைகேட்டில் அரசியல் கட்சியை சேர்ந்தவர்களுக்கும் தொடர்பு உள்ளது. முறைகேட்டில் தொடர்புடைய அனைவரும் விசாரிக்கப்பட வேண்டும். இதனால் ஐ.பி.எஸ். அதிகாரி தலைமையில் சிறப்பு விசாரணை குழு அமைத்து விசாரணையை தொடரலாம் என்றனர்.

### பா.ம.க. மகளிர் மாநாடு துண்டு பிரசுரத்தில்

# அன்புமணியின் பெயர், படம் புறக்கணிப்பு

**சென்னை, ஜூலை 18-**

பூம்புகார் மகளிர் மாநாடு துண்டு பிரசுரங்களில் அன்புமணியின் பெயர், புகைப்படம் புறக்கணிக்கப்பட்டுள்ளது பா.ம.க.வில் மீண்டும் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. அதிகாரத்தை கைப்பற்றுவதில் பாமகவில் அதன் நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணிக்கு இடையே கடும் மோதல் நீடிக்கிறது. அன்புமணி யின் தலைவர் பதவி காலாவதியாகிவிட்டது என தேர்தல் ஆணையத்தில் ராமதாஸ் கடிதம் அளித்துள்ளார். மேலும் தனது மூத்த மகள் ஸ்ரீகாந்திக்கு, பாமகவில் முக்கியத்துவம் கொடுக்க தொடங்கி உள்ளார். அவருக்கு பதவி வழங்குவது குறித்து 'போக போக தெரியும்' என புதிர் போட்டுள்ளார். இதுமட்டுமின்றி, தைலாபுரத்தில் உள்ள எனது வீட்டில், அரசியல் ரீதியாக ஆலோசனை நடத்தும் இடத்தில், என்னுடைய நாற்காலியில் ஒட்டு கேட்பு கருவி பொருத்தப்பட்டுள்ளதாக கூறினார். இது தொடர்பாக விழுப்புரம் மாவட்ட சைபர் க்ரைம் பிரிவில் பாமக சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வன்னியர் சங்கம் சார்பில் பூம்புகாரில் வரும் ஆகஸ்ட் 10-ம் தேதி நடைபெற உள்ள மகளிர் மாநாடு துண்டு பிரசுரத்தை திண்டிவனம் அடுத்த தைலாபுரத்தில் பாமக அரசியல் ஆலோசனைக் குழுத் தலைவர் பேராசிரியர் தீரன் நேற்று விநியோகம் செய்தார். இதில், ராமதாஸ் பெயர் மற்றும் அவரது புகைப்படம் மட்டும் இடம் பெற்றிருந்தது. பாமக நிகழ்வுகளிலும், ராமதாசுடன் இடம்பெற்று வந்த, அன்புமணியின் பெயர் மற்றும் புகைப்படம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. திண்டிவனம் அடுத்த ஓமந்தூரில் கடந்த 8-ம் தேதி நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டத்திலும் அன்புமணியின் பெயர் மற்றும் புகைப்படம் இடம் பெறவில்லை. இது குறித்து ராமதாஸ் ஆதரவாளர்கள் கூறும்போது, "கட்சியை தோளில் சுமந்தவர், சுமந்து வருபவர் ராமதாஸ். அவரது வழிகாட்டுதலின்படி செயல்படவே, பாமகவினர் விரும்புகின்றனர். பாமக என்றால் அவர் மட்டும்தான். அதனால் தான், மகளிர் மாநாடு துண்டு பிரசுரத்தில், அவரது பெயர் மற்றும் புகைப்படம் மட்டும் இடம்பெற்றுள்ளது" என்று தெரிவிக்கின்றனர்.

### ஆனைமலை சாலை விபத்தில்
# உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி அறிவிப்பு

**சென்னை, ஜூலை 18-**

ஆனைமலை சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:- கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியார் கிராமம், நவமலைபதியைச் சேர்ந்த 22 நபர்கள் டாடா ஏஸ் வாகனத்தில் வேலை நிமித்தமாக ஆனைமலை வட்டம், ஆழியார் கிராமம், வால்பாறை-ஆழியார் சாலை, சின்னார்பதி என்னுமிடத்தில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக மேற்படி வாகனம் சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் அதில் பயணம் செய்த ராணி (வயது 45) என்பவர் சம்பவ இடத்திலும், திலகராஜ் (வயது 40) என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலும், சஞ்சய்குமார் (வயது 20) என்பவர் மேல்சிகிச்சைக்காக கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து பொள்ளாச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 19 நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மயிலாடுதுறை மதுவிலக்கு டி.எஸ்.பி. கார் முன்னறிவிப்பின்றி திரும்ப பெறப்பட்டதா?
### காவல்துறை விளக்கம்

**சென்னை, ஜூலை 18-**

மயிலாடுதுறையில் மதுவிலக்கு டி.எஸ்.பி. வாகனம் இன்றி நடந்து சென்றதாக வெளியான செய்திக்கு மாவட்ட காவல்துறை மறுப்பு தெரிவித்துள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மது விலக்கு அமலாக்கப் பிரிவு டி.எஸ்.பி.யாக பணிபுரிந்து வருபவர் சுந்தரேசன். இவருக்கு வழங்கப்பட்ட வாகனம் எந்த காரணமும் தெரிவிக்காமல் அரசு திரும்ப பெற்றதாக தகவல் வெளியானது. இதனால், அவர் தனது வீட்டில் இருந்து காவல் சீருடையுடன் இவர் பணிபுரியும் காவல் நிலையத்துக்கு சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் நடந்தே சென்றார். இது போலீசாரின் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது தொடர்பான வீடியோ சமூகவலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. இந்நிலையில் மயிலாடுதுறையில் மதுவிலக்கு டி.எஸ்.பி. வாகனம் இன்றி நடந்து சென்றதாக வெளியான செய்திக்கு மாவட்ட காவல்துறை மறுப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாவட்ட காவல்துறை தரப்பில் வெளியிட்ட தகவலின்படி, மயிலாடுதுறை மதுவிலக்கு துறை டி.எஸ்.பி. சுந்தரேசனுக்கு வாகனம் வழங்கப்படவில்லை என்பது உண்மைக்கு புறம்பான செய்தி. அவருக்கு மாற்று வாகனம் வழங்கப்பட்டது. கடந்த 11-ம் தேதி முக்கிய அலுவலுக்காக அவரது வாகனத்தை பெற்று மாற்று வாகனம் வழங்கப்பட்டது. நேற்று மீண்டும் டி.எஸ்.பி. சுந்தரேசன் பயன்படுத்தி வந்த வாகனமே வழங்கப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மயிலாடுதுறை மாவட்டத்தில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் டி.எஸ்.பி. சுந்தரேசனின்யின் வாகனத்தை முன் அறிவிப்பு இன்றி அரசு திரும்ப பெற்றுள்ளதற்கு தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை கடும் கண்டனத்தை பதிவு செய்தார்.

# தூய்மையான நகரங்களின் பட்டியலில் 8-வது முறையாக இந்தூர் முதல் இடம்



**புதுடெல்லி, ஜூலை 18-**

தூய்மையான நகரங்களின் பட்டியலில் 8-வது முறையாக மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரம் முதல் இடம் பிடித்துள்ளது.

உலகின் தூய்மையான நகரங்களுக்கான மிக பெரிய சர்வே 9-வது ஆண்டாக இந்த ஆண்டும் நடந்தது. இதன்படி, 2024-25 ஆண்டுக்கான, ஸ்வச் சர்வேக்சன் எனப்படும் தூய்மையை கணக்கெடுக்கும் பணி நடந்து முடிந்துள்ளது. தூய்மையை நோக்கிய இந்திய நகரங்களின் பயணம் என்பதற்கான வரையறையை குறிக்கும் வகையில் ஸ்வச் சர்வேக்சன் திட்டம் அமைந்துள்ளது.

இதன் அடிப்படையில், நடப்பு ஆண்டில் மொத்தம் 78 விருதுகள் வழங்கப்படுகின்றன. இதற்கான விருது வழங்கும் விழா புதுடெல்லியில் நேற்று நடந்தது. இந்நிகழ்ச்சியில் தூய்மையான நகரங்களுக்கான விருதுகளை ஜனாதிபதி திரவுபதி முர்மு வழங்கினார். இதில், மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரம் முதல் இடம் பிடித்துள்ளது. 8-வது முறையாக தொடர்ந்து முதல் இடம் பிடித்து இந்த பெருமையை தக்க வைத்து கொண்டது. 2-வது இடம் சூரத்திற்கும், 3-வது இடம் நவி மும்பைக்கும் கிடைத்துள்ளது.

இதேபோன்று இந்தியாவின் பெரிய நகரம் (10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை) என்ற அந்தஸ்து குஜராத்தின் ஆமதாபாத் நகருக்கு கிடைத்துள்ளது. இதற்காக, குஜராத் அரசு சார்பில் மந்திரி ருஷிகேஷ் பட்டேல் சென்று விருது பெற்று கொண்டார். சூரத் நகருக்கான விருது பெற்ற குஜராத் உள்துறை மந்திரி ஹர்ச சங்கவி பேசும்போது, இதற்காக உழைத்த அனைவருக்கும், குறிப்பிடும்படியாக தூய்மை பணியாளர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து கொள்கிறேன் என்றார்.

# பீகாரில் வீடுகளுக்கு மாதம் 125 யூனிட் மின்சாரம் இலவசம்: நிதிஷ் அறிவிப்பு

**பாட்னா, ஜூலை 18-**

பீகாரில் வீடுகளுக்கு மாதம் 125 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் என முதல்வர் நிதிஷ் குமார் அறிவித்துள்ளார்.

பீகார் முதல்வர் நிதிஷ்குமார் அவரது சமூக வலைதளத்தில் கூறியுள்ளதாவது : மக்கள் பயன்பெறும் வகையில் மின் நுகர்வில் ஒரு புதிய திட்டத்தை அறிவித்துள்ளேன். வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்சாரம் 125 யூனிட் வரை எவ்வித கட்டணமும் செலுத்த தேவையில்லை. இது வரும் ஆக.1 முதல் உடனடியாக அமலுக்கு வருகிறது. இதன்மூலம் 1. 67 கோடி பேர் பயன்பெறுவர். சூரியசக்தி மின்சார திட்டமும் மேலும் பரவலாக்க முடிவு செய்துள்ளதாகவும், இதற்கு குதிர் ஜோதி யோஜனா மானியம் வழங்கப்படும். ஏழைக் குடும்பங்களுக்கு இலவச சூரிய மின் உற்பத்தி உபகரணங்களும் வழங்கப்படும், இது மின் நெருக்கடியைக் குறைக்க உதவும். அனைத்து மக்களும் எளிய மின்சாரம் பெற வேண்டும் என்பதே எங்களின் நோக்கம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நிதிஷ்குமாரின் இந்த அறிவிப்பு வரவிருக்கும் தேர்தலுக்கு மக்களை மயக்கும் செயல் என எதிர்கட்சியினர் குறை கூறியுள்ளனர்.

# மதுராந்தகத்தில் 23-ம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம்: இ.பி.எஸ். அறிவிப்பு

**சென்னை, ஜூலை 18-**

நகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து, செங்கல்பட்டு கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மதுராந்தகத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம், மதுராந்தகம் நகராட்சியில் நிலவி வரும் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி வாழ் மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். மதுராந்தகம் நகராட்சியில் குடிநீர் பிரச்சனையைப் போக்குவதற்கு குடிநீர் குழாய் மற்றும் கிணறு அமைக்கும் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் பணிகள் முடிவடையாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால் மக்கள் குடிநீருக்கு அலையும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

நகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் நான்கு ஐந்து நாட்களுக்கு ஒருமுறைதான் குப்பைகளை அள்ளுகின்றனர். இதனால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு போதிய வசதிகளை செய்து தராத நிலையில், சொத்து வரி, வீட்டு வரி உள்ளிட்ட பல்வேறு வரிகள் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம், மதுராந்தகம் நகராட்சியில் வாழும் மக்களின் அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தராமல் மெத்தனப் போக்கோடு இருந்து வரும் தி.மு.க. அரசு மற்றும் நகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து அ.தி.மு.க. செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்தின் சார்பில் 23.7.2025 – புதன் கிழமை காலை 10 மணியளவில், மதுராந்தகம் நகராட்சி அலுவலகம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பா. பென்ஜமின் தலைமையிலும்; செங்கல்பட்டு கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருக்கழுக்குன்றம் ஆறுமுகம், செங்கல்பட்டு கிழக்கு மாவட்டக் கழக அவைத் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளவருமான ம. தனபால், கழக மகளிர் அணி இணைச் செயலாளரும், மாவட்ட மகளிர் அணிச் செயலாளருமான மரகதம் குமரவேல், ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியா மீது தாக்குதல் நடந்தால்....
# உலகிற்கு வலிமையான செய்தியை கொடுத்திருக்கிறோம்: அமித்ஷா பேச்சு



**ஜெய்ப்பூர், ஜூலை 18-**

இந்தியா தாக்கப்பட்டால், கடுமையான விளைவுகள் ஏற்படும் என உலகிற்கு ஒரு வலிமையான செய்தியை நாம் கொடுத்திருக்கிறோம் என்று அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ஜெய்ப்பூர், ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் நகரில் ததியா கிராமத்திற்கு வருகை தந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு நேற்று பேசினார்.

அவர் பேசும்போது, பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், உலகில் 4-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்து உள்ளது. வறுமையில் இருந்து 27 கோடி பேர் மீட்டெடுக்கப்பட்டு உள்ளனர். நாட்டை பாதுகாப்பாக இருக்க செய்ய வேண்டும் என்பதே பிரதமர் மோடி செய்த மிக பெரிய விசயம் ஆகும் என்றார். காங்கிரஸ் காலத்தில் அடிக்கடி பயங்கரவாத தாக்குதல்கள் நடந்தன என கூறிய அவர், உரி தாக்குதலுக்கு பதிலடியாக, துல்லிய தாக்குதலை மோடி நடத்தினார். புல்வாமா தாக்குதலுக்கு பதிலடியாக வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டது.

பஹல்காம் தாக்குதலுக்கு பின்பு, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால், இந்தியா தாக்கப்பட்டால், கடுமையான விளைவுகள் ஏற்படும் என உலகிற்கு ஒரு வலிமையான செய்தியை நாம் கொடுத்திருக்கிறோம் என்று அவர் பேசியுள்ளார்.

# ஆடி மாத பூஜைக்காக சபரிமலை அய்யப்பன் கோவில் நடை திறப்பு

**திருவனந்தபுரம், ஜூலை 18-**

ஆடி மாத பூஜைக்காக சபரிமலை அய்யப்பன் கோவில் நடை திறக்கப்பட்டது.

சபரிமலை அய்யப்பன் கோவிலில் ஒவ்வொரு தமிழ் மாதத்தின் முதல் 5 நாட்களிலும் நடை திறக்கப்பட்டு பல்வேறு பூஜைகள், வழிபாடுகள் நடைபெறும். இந்த நாட்களில் திரளான பக்தர்கள் சபரிமலைக்கு வந்து சாமி தரிசனம் செய்வார்கள். இந்த நிலையில் ஆடி மாத பூஜைக்காக சபரிமலை கோவில் நடை நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது.

தந்திரி கண்டரரு பிரம்ம தத்தன் முன்னிலையில் மேல் சாந்தி அருண்குமார் நம்பூதிரி நடையை திறந்து வைத்து தீபாராதனை நடத்தினார். தொடர்ந்து கற்பூர ஆழியில் தீ மூட்டப்பட்டது. நடை திறப்பையொட்டி நேற்று முன்தினம் சிறப்பு பூஜைகள் எதுவும் நடைபெறவில்லை. கோவில் கருவறை மற்றும் சுற்றுப்புற பகுதிகள் சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது.

கோவிலில் நேற்று (வியாழக்கிழமை) முதல் 21-ந் தேதி வரை 5 நாட்கள் தினமும் அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு நிர்மால்ய தரிசனம், கணபதி ஹோமம், நெய் அபிஷேகம், உஷ பூஜை, உச்ச பூஜை, தீபாராதனை, புஷ்பாபிஷேகம், அத்தாழ பூஜை மற்றும் தந்திரி தலைமையில் படிபூஜை, உதயாஸ்தமன பூஜை, கலச பூஜை, களபாபிஷேகம் உள்பட சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

21-ந் தேதி அத்தாழ பூஜைக்கு பிறகு அரிவராசனம் பாடல் இசைக்கப்பட்டு இரவு 10.30 மணிக்கு கோவில் நடை அடைக்கப்படும். நடை திறப்பையொட்டி ஏராளமான பக்தர்கள் ஆன்லைன் முன்பதிவு செய்து சாமி தரிசனம் செய்தனர்.

சபரிமலை அய்யப்பன் கோவிலில் வருகிற 30-ந் தேதி நிறை புத்தரி பூஜை நடக்கிறது. இதை முன்னிட்டு 29-ந் தேதி மாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்படும். இதற்கான ஆன்லைன் முன்பதிவு நடைபெற்று வருவதாக திருவிதாங்கூர் தேவஸ்தானம் அறிவித்து உள்ளது.

# உண்மையை திரித்து எழுத முடியாது: கீழடி ஆய்வாளர் அமர்நாத் உறுதி

**சென்னை, ஜூலை 18-**

கீழடி அறிக்கையின் உண்மையை திருத்தச் சொல்வது குற்றம், அநீதியானது. நான் கண்டுபிடித்ததை திருத்தினால் நான் குற்றவாளியாகிவிடுவேன் என்று ஆய்வாளர் அமர்நாத் தெரிவித்துள்ளார்.



கீழடியில் ஆய்வு மேற்கொண்டு கி.மு.8 நூற்றாண்டில் என்னென்ன பயன்படுத்தப்பட்டது. அந்த கால மக்களின் நாகரிகம், விவசாயம், விலங்குகள், கலாசாரம் பழக்கவழக்கம் எப்படி இருந்தது, இரும்பு பயன்படுத்தியது என அமர்நாத் ஐ.ஏ.எஸ். கண்டுபிடித்து, இந்திய தொல்லியல் துறைக்கு ஆய்வு மேற்கொண்டிருந்தார்.

அந்த ஆய்வு அறிக்கையை கி.மு 3 ஆம் நூற்றாண்டு என திருத்துமாறு மத்திய அரசு, அமர்நாத்துக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக கூறப்படுகிறது. கீழடி தொல்லியல் ஆய்வு பொறுப்பாளராக ஸ்ரீராம் என்பவர் நியமிக்கப்பட்டார்.

அவர் 3ஆம் கட்ட அகழாய்வு நடத்தி, அமர்நாத் குறிப்பிடும் படியான கண்டுபிடிப்புகள் ஏதும் இல்லை என கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஐ.ஏ.எஸ். அதிகாரி அமர்நாத், ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில், கீழடி அறிக்கையின் உண்மையை திருத்தச் சொல்வது குற்றம், அநீதியானது. நான் கண்டுபிடித்ததை திருத்தினால் நான் குற்றவாளியாகிவிடுவேன்.

நான் தாக்கல் செய்த 982 பக்கங்களில் எழுத்துப் பிழையை வேண்டுமானால் திருத்த தயாராக இருக்கிறேன். ஆனால் உண்மையை திரித்து எழுத முடியாது.

கி.மு 8ஆம் நூற்றாண்டில் கண்டுபிடித்ததை கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடித்தவை என மத்திய அரசு மாற்ற வலியுறுத்துகிறது. நான் கண்டுபிடித்த விஷயங்களையே மாற்றச் சொன்னால் கீழடியின் தொன்மையை சிதைக்கும் செயலாகும்.

சிந்து சமவெளி நாகரீகம், வேத காலம், மவுரிய, ஹர்ஷவர்தன் காலத்தையே மத்திய அரசு பேசி வருகிறது. ஆனால் சங்க கால வரலாற்றை பற்றி ஏன் மத்திய அரசு ஆய்வு செய்யவில்லை. இவ்வாறு அமர்நாத் ராமகிருஷ்ணா தெரிவித்தார்.

# த.வெ.க. கட்சிக்கொடி விவகாரம்: விஜய் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, ஜூலை 18-**

த.வெ.க. கட்சிக் கொடி தொடர்பாக த.வெ.க. மற்றும் அதன் தலைவர் விஜய் பதிலளிக்க ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது.

த.வெ.க. கட்சித் தலைவர் விஜய் கடந்த 2024 தொடங்கி கட்சியின் கொடி அறிமுகம் செய்தார். அதில் சிவப்பு - மஞ்சள் - சிவப்பு நிறங்கள் இடம் பெற்றிருந்தது.

இதை எதிர்த்தும், த.வெ.க. கட்சி கொடியில் உள்ள வண்ணங்களை நீக்க உத்தரவிடக் கோரியும் தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை நிறுவனர் தலைவர் பச்சையப்பன் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

அந்த மனுவில், தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை மட்டுமே குறிப்பிட்ட நிறங்களை கொண்ட கொடியை பயன்படுத்த உரிமை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கெனவே தமிழக வெற்றிக் கழக கொடியில் உள்ள யானை சின்னத்தை அகற்றக் கோரி பகுஜன் சமாஜ் கட்சி தொடர்ந்த வழக்கு சென்னை உரிமையியல் கோர்ட்டில் நிலுவையில் உள்ள நிலையில், த.வெ.க. கட்சி கொடியில் இடம் பெற்றுள்ள வண்ணத்தை நீக்க கோரி மேலும் ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ளது அக்கட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்தி இருந்தது. இந்நிலையில் த.வெ.க. கட்சிக் கொடி தங்கள் அமைப்பின் கொடியை பிரதிபலிப்பதாக தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை என்ற அமைப்பு தொடர்ந்த வழக்கு தொடர்பாக த.வெ.க. மற்றும் அதன் தலைவர் விஜய் பதிலளிக்க ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது.

# ராகுலின் ரேபரேலி பயணம் ரத்து

**ரேபரேலி, ஜூலை 18-**

ரேபரேலி பயணத்தை ராகுல்காந்தி ரத்து செய்தார்.

நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, உத்தர பிரதேச மாநிலம் ரேபரேலி தொகுதியில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார். ராகுல்காந்தி உத்தரபிரதேச தலைநகர் லக்னோ வழியாக ரேபரேலிக்கு சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதாக இருந்தது. ஆனால், இந்த பயணம் தவிர்க்க இயலாத காரணங்களால் ரத்து செய்யப்பட்டதாக மாவட்ட காங்கிரஸ் தலைவர் பங்கஜ் திவாரி தெரிவித்தார். புதிய தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.



**வரும் 25-ம் தேதி ராஜ்யசபா உறுப்பினராக பதவியேற்கும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசனை, விடுதலைச்சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் நேற்று நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.**

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



பீகாரில் 'எஸ்.ஐ.ஆர்' என்ற பெயரில் வாக்குகளைத் திருடியபோது தேர்தல் ஆணையம் கையும் களவுமாகப் பிடிபட்டுள்ளது. தேர்தல் ஆணையம் இன்னும் 'தேர்தல் ஆணையமாக' இருக்கிறதா அல்லது அது முற்றிலும் பாரதிய ஜனதாவின் 'தேர்தல் திருட்டு' கிளையாக மாறி விட்டதா?

**- ராகுல் காந்தி**



தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிதான் நடைபெறும் என்று மிகத்தெளிவாக அமித்ஷா கூறிவிட்டார். அவரது கருத்தையே நான் பேசுகிறேன். தமிழகத்தில் கூட்டணி ஆட்சி நடைபெறும் என அமித்ஷா கூறுவதே எனக்கு வேத சத்தியம். எனது தலைவர்களின் நிலைப்பாடு மாறும்வரை நானும் நிலைப்பாட்டை மாற்ற மாட்டேன்.

**- அண்ணாமலை**



இந்துத்துவ சனாதன சக்திகளின் திட்டப்படி நாட்டின் பன்முகத்தன்மைக்கும், மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் முயற்சிகளுக்கும் என்.சி.இ.ஆர்.டி துணை போவது கடும் கண்டனத்துக்குரியது. உடனடியாக பாடப்புத்தகங்களில் இருந்து முகலாயர்கள் குறித்த தேவையற்ற கருத்துக்களை நீக்க வேண்டும்.

**- வைகோ**



'கிட்னி', ஒரு வியாபாரப் பொருளாக மாறிவிட்டது என்பது வருத்தத்துக்குரியது. ஏழை மக்களின் உடல் உறுப்புகளை விற்பனைக்கான பொருளாக பயன்படுத்துவது மனித உரிமையை முற்றிலும் இழிவுப்படுத்தும் செயல். இதற்கு முற்றுப்புள்ளி வைக்க தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- செல்வப்பெருந்தகை**

# சாயர்மலை உமையொருபாக ஈஸ்வரர் கோயில் பராமரிப்பு பணிகள் துவக்கம்: ராஜா எம்எல்ஏ நடவடிக்கை



சங்கரன்கோவில், ஜூலை.18.

சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி சாயர்மலை அருகே உள்ள மேலசிவகாமிபுரம் கிராமத்தில் அமைந்துள்ளது சிவகாமி அம்பாள் சமேத உமையொருபாக ஈஸ்வரர் கோயிலாகும். இந்த கோவில் 17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக வரலாறு தெரிவிக்கின்றது.

இந்த கோயிலில் விநாயகர், முருகன், தட்சிணாமூர்த்தி, பைரவர், மாடன், மாடத்தி, சனீஸ்வரர், சண்டிகேஸ்வரர், சூரியன், சந்திரன் உபசன்னதிகளும் உள்ளது. கோயிலில் ஒருகால பூஜை திட்டத்தின் கீழ் சிவாகம முறைப்படி ஒரு கால பூஜை நடைபெற்று வருகிறது. மாசி மாதம் மகாசிவராத்திரி முக்கிய திருவிழாவாக நடைபெறுகிறது. கார்த்திகை மாதம் கார்த்திகைதீபம் திருவிழாவாக நடைபெறுகிறது.

மேலும் பிரதோஷ காலத்தில் இங்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த கோயில் சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி கோயிலின் துணை கோயிலாகவும் உள்ளது.

இந்த கோயிலில் பல ஆண்டுகளாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமல் கோயில் மிகவும் சிதிலமடைந்து இருந்ததால் பக்தர்கள் மிகுந்த வேதனைக்கு உள்ளாகினர்.இது குறித்து ராஜா எம்எல்ஏவிடம் இந்த பகுதி மக்கள் இந்த கோயிலை சரி செய்து தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

அதைத் தொடர்ந்து சட்டமன்றத்தில் பழமை வாய்ந்த இந்த கோயிலை சரி செய்து தர வேண்டும் என கோரிக்கை வைத்தார்.அதற்கு பதில் அளித்த அமைச்சர் சேகர்பாபு திராவிட மாடல் அரசு அமைந்த பின் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது எனவும், சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதியில் உள்ள சாயர்மலை உமையொருபாக ஈஸ்வரர் கோயில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இந்த கோயிலில் கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் நிதியிலிருந்து இந்த கோயில் புனரமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து இந்த கோயிலில் தற்போது பராமரிப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது இந்த பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு திருக்குடமுழுக்கு விழா நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த கோயிலில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் துணை ஆணையர் கோமதி, பொறியாளர் முத்துராஜ், திமுக ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் செந்தில்நாதன், நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள் முருகன், அல்லித்துரை, மற்றும் பூலித்தேவர் மக்கள் முன்னேற்ற கழக மாநில கொள்கை பரப்புச் செயலாளர் முருகன் மற்றும் பக்தர்கள் பொதுமக்கள் உடன் இருந்தனர் உடன் இருந்தனர். இந்த பகுதி இந்த பகுதி மக்களின் நீண்ட ஆண்டுகள் கோரிக்கையை ஏற்று இந்த பாரம்பரிய மிக்க கோயிலை சரி செய்ய நடவடிக்கை எடுத்த தமிழக அரசுக்கும், இதற்கு முயற்சி மேற்கொண்ட தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ விற்கும் பக்தர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

## கோயில் திருப்பணிக்கு உபயதாரர்கள் தாராளமாக நிதி வழங்க வேண்டும்: ரூ.1.25 லட்சம் வழங்கி ராஜா எம்எல்ஏ கோரிக்கை

சாயர்மலை பிரசித்தி பெற்ற உமையொருபாக ஈஸ்வரர் கோயில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் நிதி மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்நிலையில் கோயில் பணிகளுக்காக தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ ரூபாய் 1.25 லட்சம் நிதி வழங்கினார். மேலும் ராஜா எம்எல்ஏ தெரிவித்ததாவது,

பழமை வாய்ந்த இந்த கோயிலுக்கு உபயதாரர்கள் தாராளமாக நிதி வழங்க வேண்டும் எனவும், கோயிலில் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு ஆறு மாத காலத்திற்குள் குடமுழுக்கு விழா நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார்.



கோவில்பட்டியில் காமராஜர் சிலைக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் நற்பணி இயக்கம் சார்பில் அதன் தலைவர் நேதாஜி பாலமுருகன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். ரத்தினவேல், முத்துசாமி, ஆழ்வார் சாமி ,உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சுரண்டை, ஆலங்குளம், கடையம் பகுதிகளில்

# உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்யும் பணி: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் ஆய்வு



தென்காசி ஜூலை.18:

தென்காசி மாவட்டம் சுரண்டை, ஆலங்குளம், கடையம் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் திட்ட முகாம் மற்றும் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்யப்படுவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டம் சுரண்டை, ஆலங்குளம், கடையம் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்"சிறப்பு திட்ட முகாமில் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் திட்ட முகாம் மற்றும் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்யப்படுவதை கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது

தென்காசி மாவட்டத்தில்" உங்களுடன் ஸ்டாலின்" முகாம் சுரண்டையில் வார்டு எண் 1, 4,5 ஆகியவற்றிற்கான முகாம் சிவகுருநாதபுரம் முப்புடாதி அம்மன் கோவில் கலையரங்கத்திலும், ஆலங்குளத்தில் வார்டு எண் 1,7 ஆகியவற்றிற்கான முகாம் ஆலங்குளம் வார்டு எண் 12 அண்ணா நகர் மெயின் ரோடு சமுதாய நலக்கூடத்திலும், கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கான முகாம் கடையம் சைவ வெள்ளாளர் திருமண மண்டபத்திலும் , கடையநல்லூரில் வேலாயுதபுரம் இ-சேவை மையத்திலும், குருவிகுளத்தில் கலிங்கப்பட்டி கீழத்தெரு சமுதாய நலக்கூடத்திலும், மேலநீலிதநல்லூரில் ஈச்சந்தா பெரியசாமிபுரம் திருமண மண்டபத்திலும் நடைபெறுகிறது .

இம்முகாமில், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தி துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, கால்நடை பராமரிப்பு பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, தகவல் தொழில்நுட்பவியல் சேவைகள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, வேளாண்மை - உழவர் நலத்துறை என 15 துறைகள் மூலம் 46 சேவைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சிறப்பு செயலாக்கத்திட்டத்துறைமூலம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கு விண்ணப்பம் வழங்கப்படுகிறது.இந்த முகாம்களில் மருத்துவ சேவை வழங்க மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது.காவல்துறையினரால் "May I help you" தகவல் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பொதுமக்கள் அவர்களது பகுதிகளில் நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.இந்த ஆய்வின்போது துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



தொடுவானம் கலை இலக்கிய பேரவை சார்பில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் தென் தமிழக எழுத்தாளர்கள் பலர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை கவிஞர் நெல்லை தேவன் செய்திருந்தார்.

# வெளிநாட்டு வேலைக்குச் செல்வோருக்கு தென்காசி மாவட்ட கலெக்டர் அறிவுரை

தென்காசி ஜூலை.18:

தென்காசி மாவட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை நாடி செல்வோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அவர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு இந்த அறிவுரை வெளியிடப்படுகிறது.

வெளி நாட்டு வேலைக்குச் செல்லும் முன் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியவை வெளிநாட்டு வேலைக்குச் செல்ல விரும்பும் நபர்கள், முதலில் இந்தியஅரசின் eMigrate (https://emigrate.gov.in) இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட அதிகாரப்பூர்வ ஆட்சேர்ப்பு முகவர்கள் மூலமாகவே செல்ல வேண்டும். எந்த நிறுவனத்தில் / முதலாளியிடம் வேலை செய்ய இருக்கிறீர்கள் போன்ற தகவல்களையும் முன்னதாக உறுதி செய்து கொள்வது அவசியமாகும். வேலைக்கான ஒப்பந்தம், விசா, மற்றும் தேவையான அனைத்து ஆவணங்களும் பெற்ற பிறகே பயணிக்க வேண்டும். வேலைக்கான ஒப்பந்தத்தை எப்போதும் கைவசம் வைத்திருக்க வேண்டும். ஏனெனில் அதில் ஊதியம். வேலை விவரங்கள். உரிமைகள். பொறுப்புகள் போன்ற முக்கியமான விவரங்கள் இடம் பெறுகின்றன. வேலை செய்யும் நாட்டின் சட்டங்கள். கலாச்சாரங்களை மதித்து நடந்து கொள்ள வேண்டும். பல நாடுகளில் வேலைக்கு செல்லும் நபர் நாடு திரும்புவதற்கு வெளிச் செல் அனுமதி (Exit Permit) பெறுவது அவசியமாகும். ஒப்பந்த காலத்தில் வேலைக்கு சென்ற நிறுவனம் / முதலாளியிடமிருந்து வேறு நிறுவனத்திற்கோ. முதலாளிக்கோ மாற்றம் செய்ய முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதே நேரத்தில். பதிவு பெறாத போலி முகவர்கள் மூலம் வேலைக்கு செல்லும் நோக்கத்தில் வெளிநாடு பயணிக்கக்கூடாது. சுற்றுலா விசாவில் வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்வது. அந்நாட்டில் சட்ட விரோதமாகக் கருதப்படும். இது கைது, அபராதம், அல்லது சிறைதண்டனைக்கே இட்டு செல்லும்

வெளிநாட்டு வேலை தொடர்பான சந்தேகங்களுக்கு மற்றும் வெளிநாடு செல்லும் தமிழர்களுக்கான அரசின் நலத்திட்டங்கள் குறித்து அறிய அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் 24/7 கட்டணமில்லா உதவி மையத்தினை தொடர்பு கொள்ளவும்: இந்தியாவிலிருந்துஅழைப்புக்கு : 1800 309 3793 வெளிநாடுகளிலிருந்து அழைப்புக்கு: 080 69009900 (Missed Call); 0 80 6900 9901 மின்னஞ்சல் : nrtchennai@gmail.com /nrtchennal@tn.gov.in வலைத்தளம் : https://nrtamils.tn.gov.in வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை நாடும் நபர்கள், குறுக்கு வழிகளை தவிர்த்து. அரசு அமைத்துள்ள சட்டப்பூர்வமான வழியில் செல்லும் போது தான் பாதுகாப்பான வாழ்க்கையை கட்டியெழுப்ப முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.

செங்கோட்டையில்

# சுதந்திர போராட்ட வீரர் வாஞ்சிநாதன் சிலைக்கு கலெக்டர் கமல்கிஷோர், பழனிநாடார் எம்எல்ஏ மரியாதை



செங்கோட்டை, ஜூலை, 18,

செங்கோட்டை முத்துசாமி பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள வாஞ்சிநாதன் மணிமண்டபத்தில் வைத்து சுதந்திர போராட்ட வீரர்வாஞ்சிநாதன் 139வது பிறந்தநாள் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் தென்காசி கலெக்டர் கமல்கிஷோர் மற்றும் தென்காசி சட்டமன்ற உறுப்பினரும், தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவருமான பழனிநாடார் வாஞ்சிநாதனின் தம்பி மகன் ஹரிஹரசுப்பிரமணியன், அவரது மனைவி, மகன் வாஞ்சிகோபாலகிருஷ்ணன் செங்கோட்டை நகர்மன்ற தலைவர் ராமலெட்சுமி, முன்னாள் நகர்மன்ற தலைவர் எஸ்எம்.ரஹீம் ஆணையாளர் செல்வராஜ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.பின்னர் பேருந்து நிலையம் அருகே உள்ள வாஞ்சிநாதன் முழுஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் செங்கோட்டை ஊராட்சி ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் சட்டநாதன், நகர காங்கிரஸ் தலைவர் ராமர், வட்டார காங்கிரஸ் தலைவர் கதிரவன், மாவட்ட துணைத் தலைவர் பால் (எ) சண்முகவேல், மாவட்ட பொதுச்செயலாளர் மூக்கையா, நகர காங்கிரஸ் முன்னாள் தலைவர் ஜோதிலிங்கம், நகர்மன்ற உறுப்பினர் முருகையா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் செண்பகம், மாவட்ட பிரதிநிதி சீனிவாசன், மாவட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகத்துறை பொதுச் செயலாளர் ராஜீவ்காந்தி, நகர துணைத் தலைவர் காதர்அலி, நகர பொதுச் செயலாளர் இசக்கியப்பன், நகர செயலாளர் நடராஜன், பெரியபிள்ளைவலசை கிராம காங்கிரஸ் தலைவர் சாய்பு, நகர தொழிற்சங்க தலைவர் செல்வகணபதி, நகர பட்டியல் அணி தலைவர் சிவன், வார்டு தலைவர் ஜேம்ஸ், பிரபாகரன், அரவிந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரிமாவட்டம்மாதவலாயம்அரசுமேல்நிலைப்பள்ளிமாணவ,மாணவிகளிடையே கலெக்டர் ஆர். அழகுமீனா கலந்துரையாடினார்.



தென்காசி மாவட்டம் வீரகேரளம்புதுதூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரத்தினை கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர்நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



திமுக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலைக்கு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன் நிர்வாகிகளோடு பிறந்தநாள் வாழ்த்து கூறினார்

# மாநில சதுரங்க போட்டியில் ட்ரஷர் ஐலண்ட் பள்ளி மாணவன் சாதனை



தென்காசி ஜூலை..18:

ட்ரஷர் ஐலண்ட் பள்ளியின் மாணவர் ஜெகத்பிரபு தனது சதுரங்க திறமையை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்நாடு மாநில சதுரங்க போட்டியில் ஓபன் கேட்டகிரியில் திறம்பட பங்கேற்று , நான்காவது இடத்தை பிடித்தார். இந்த போட்டி கிராக்கர்ஸ் நைட் மற்றும் ஐ க்யூ செஸ் ஆலயம் அமைப்புகளால் ஒருங்கிணைக்கப்பட்டது. இப்போட்டி சிவகாசி ஜெய்சீஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சிவகாசியில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து பல்வேறு வயதுடைய மாணவர்கள் பங்கேற்று தங்கள் யோசனைகளையும், திறமைகளையும் வெளிப்படுத்தினர். ஜெகத் பிரபு தனது உழைப்பும், போட்டி மனோபாவமும் மூலம் அனைவரிடமும் பாராட்டைப் பெற்றார். போட்டி நடத்தியவர்கள் பங்கேற்ற அனைத்து மாணவர்களையும் உற்சாகமாக பாராட்டினர்.

இத்தகைய போட்டிகள் மாணவர்களின் புத்திசாலித்தனத்தையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கும் முக்கிய வாய்ப்புகளை அளிக்கின்றன.



தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தூத்துக்குடி மேற்கு மாவட்டம் சார்பில் கோவில்பட்டி புதிய மார்க்கெட்டில் எஸ்எம் பாஸ்கர் தலைமையில் காமராஜர் உருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி அன்னதானம் வழங்கப்பட்டது.



திமுக இணைஅமைப்புச்செயலாளர் அன்பகம் கலை பிறந்தநாளை முன்னிட்டு ராணி ஸ்ரீகுமார் எம்பி.நகரமன்ற தலைவர் மூப்பன்ஹபீபூர் ரஹ்மான், ஒன்றிய செயலாளர் ரவிசங்கர், ஒன்றிய பொறுப்பாளர்களான பொன் செல்வன், ஜேகே ரமேஷ், சேக் முகம்மது ,வழக்கறிஞர் சிவக்குமார், கடையம் குமார், சொக்கம்பட்டி மணிகண்டன், சமுத்திர பாண்டியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி ஆர் கிருஷ்ணராஜா ஆகியோர் நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தனர்.



திமுக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலைக்கு தென்காசி முன்னாள் வடக்கு மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான டாக்டர். மா.செல்லத்துரை பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தார்

## கடையம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் மருத்துவ முகாம்



**தென்காசி ஜூலை..18:**

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் தீயணைப்பு நிலையத்தில் இந்திய பல் மருத்துவ சங்கத்தின் தென்காசி கிளை சார்பாக சிறப்பு பல் மருதது்வ முகாம் நடைபெற்றது.

இதில் 50க்கும் மேற்பட்டோருக்கு பல் சம்பந்தமான ஆலோசனை, பேஸ்ட் சாம்பிள் வழங்கப்பட்டது.

தீயணைப்பு நிலையத்தில் தீ பாதுகாப்பு விழிப்புணர்வு, போலி ஒத்திகை பயிற்சி செய்து காண்பிக்கப்பட்டது.

இதில் தீயணைப்பு நிலைய அதிகாரி ஷேக் அப்துல்லா, மருத்துவர்கள் செய்யது முகம்மது தமீம், கலந்தர் மஸ்தான், ஷப்னாஸ் ரப்னா, மதிமாறன், ரமாலட்சுமி, ஸ்டான்லி புஷ்பராஜ், மைதீன் அபுதாஹிர், சுலைகாள் அப்ரின் உள்ளிட்ட மருத்துவர்கள் கலந்து கொண்டு தீயணைப்பு வீரர்களுக்கு பல் மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர்.

## மணப்பாட்டில் துறைமுகம் அமைக்க மீனவர்கள் எதிர்ப்பு: வாழ்வாதாரம் பாதிப்பு- போராட்டம் நடத்த முடிவு



**திருச்செந்தூர் ,ஜூலை.18-**

தென்மாவட்டங்களில் தூத்துக்குடி தனித்துவம் பெற்று வருகிறது. கடற்கரையையொட்டியே பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பழையகாயல் பகுதியில் சிர்கோனியம், குலசேகரன்பட்டினம் கல்லாமொழியில் நிலக்கரி இறங்குதள துறைமுகம், அனல்மின்நிலையம், குலசேகரன்பட்டினம் ராக்கெட்ஏவுதளம் என பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் காரணமாக உலகின் கவனத்தை ஈர்க்கும் வ கையில் உள்ளது.

இந்நிலையில் தற்போது செங்கல்பட்டு மாவட்டம் முகையூர், பனையூர், விழுப்புரம் மாவட்டம் மரக்காணம், கடலூர் மாவட்ட ம் சிலம்பிமங்கலம், மயிலாடுதுறை மாவட்டம் வானகிரி, நாகை மாவட்டம் விழுந்தமாவடி, தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு, குமரி மாவட்ட கடற்கரை பகுதி ஆகிய 8இடங்கள் அடையாளம் காணப்பட்டு துறைமுகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இந்த துறைமுகங்களை உருவாக்க தனியார் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சிறிய துறைமுகங்கள் அமைய உள்ள இடத்தில் கடல் வாணிபத்திற்கு அரபிக் கடல், வங்காள விரிகுடா, தீபகற்ப கடற்கரை நுழைவு வாயிலாக உள்ளது. தனியார் பங்களிப்புடன் வணிக துறைமுகங்களை ஊக்குவிப்பது துறைமுகத் துறையில் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு 30ஆண்டுகள் முதல் 99ஆண்டுகள் வரை நீண்ட கால குத்தகைக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.இதனையடுத்து ஏழைகளின் கோவா என்றழைக்கப்படும் மணப்பாட்டில் துறைமுகம் அமைக்க மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக மணப்பாடு மீனவர்கள் மீன் ஏலம் விடும் பகுதியில் ஊர்நலக்கமிட்டி தலைவர் கிளைட்டன் தலைமையில் செயலாளர் பெனோராஜ், பொருளாளர் ராஜன் ஆகியோர் முன்னிலையில் மீனவர்கள் ஆலோசனைக்கூட்டம் நடந்தது- அப்போது மீனவர்களிடம் எவ்வித கருத்துகளும் கேட்டகாமல் அரசு முடிவுஎடுத்துள்ளதை கண்டித்தும், கலெக்டரிடம் துறைமுகம் அமைக்கும் பணியை கைவிட நடவடிக்கை எடுக்க கோரி முறையிடுவது இல்லையெனில் தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபடுவது என தீர்மானங்கள் நிறைவேற்றினர். இதில் ஏராளமான மீனவர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து ஊர்நலக்கமிட்டி நிர்வாகிகள் கூறும் போது.... ஏற்கனவே மணப்பாட்டிலிருந்து 3கிலோமீட்டர் தொலைவில் தான் நிலக்கரி இறங்குதள துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. அனல்மின்நிலைய பணிக்கென கடலுக்குள் 8.5கிலோமீட்டர் தொலைவிற்கு பாலம் அமைக்கப்பட்டுள்ளதால் எங்கள் மீனவர்கள் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது மணப்பாட்டில் துறைமுகம் அமைக்கப்படும் போது மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழக்க கூடிய சூழல் உருவாகும். எனவே துறைமுகம் அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும் இல்லையெனில் எங்கள் உயிரை கொடுத்தாவது இந்த பணிகளை நிறுத்துவோம் என கூறினர்.

## வீட்டை லீசுக்கு கொடுப்பதாக கூறி ரூ.15 லட்சம் மோசடி: வீட்டு உரிமையாளர் கைது

**சென்னை ஜூலை 18-**

சென்னை, அண்ணா நகரில் வசித்து வரும் மணிகண்டன், என்பவர் 2024ம் ஆண்டு டிசம்பர் மாதம் அயனாவரம் பகுதியில் வாடகை அல்லது லீசுக்கு வீடு பார்த்து கொண்டிருந்ததாகவும், அப்பொழுது அயனாவரம், பாரதி நகரில் உள்ள ஒரு வீட்டின் உரிமையாளர் சிவகுமார் என்பவரை அணுகிய போது, அங்குள்ள வீட்டை ரூ.15 இலட்சத்துக்கு லீசுக்கு கொடுப்பதாகவும், ஆனால் தற்போது வசித்து வருபவர்கள் ஜனவர் மாதம் வீட்டை காலி செய்ததும், குடிபெயரலாம் எனவும் கூறிய தன்பேரில், மணிகண்டன் ரூ.15 லட்சம் பணத்தை சிவகுமாரிடம் கொடுத்து, குத்தகை ஒப்பந்த பத்திரம் போட்டுள்ளதாகவும், ஆனால் சிவகுமார் சொன்னபடி மேற்படி வீட்டை காலி செய்து கொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால், சில மாதங்களுக்கு முன்பு சிவகுமாரிடம் தனது லீசு பணத்தை திரும்ப கேட்டபோது, சிறிது சிறிதாக என ரூ.4.5 இலட்சம் மட்டும் கொடுத்ததாகவும், அதன் பின்னர் மீதி பணம் ரூ.10.5 இலட்சத்தை கேட்டபோது, பணத்தை தர முடியாது என மிரட்டி அனுப்பியதாகவும், மணிகண்டன் அயனாவரம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்து, மேற்படி மோசடியில் ஈடுபட்ட சிவகுமார், என்பவரை கைது செய்தனர். விசாரணையில் சிவகுமார், அயனாவரம், பாரதி நகரில் உள்ள மேற்படி வீட்டை தனியார் பைனான்ஸ் நிறுவனத்தில் அடமானம் வைத்து, அப்பணத்தை வைத்து தொழில் செய்ததில் நஷ்டம் ஏற்பட்டதாகவும், மேற்படி வீட்டை ஏற்கனவே ஒருவருக்கு குத்தகைக்கு விட்டிருந்த நிலையில்,ஒலக்ஸ்ல் விளம்பரம் செய்து, புகார்தாரர் மணிகண்டன் மற்றும் மேலும் ஒருவருக்கு அதே வீட்டை குத்தகைக்கு விடுவதாக கூறி பணத்தை பெற்று மோசடி செய்துள்ளதும் தெரியவந்தது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### உடன்குடியில்
## காங்.,சார்பில் காமராஜர் பிறந்த நாள் விழா

**திருச்செந்தூர் ஜூலை 18**

உடன்குடி வட்டார நகர காங்., கமிட்டி சார்பில் காமராஜரின் 123 பிறந்த நாள் விழா உடன்குடி மெயின் பஜாரில் வைத்து நடந்தது. முன்னதாக காமராஜர் உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். பின்னர் காமராஜர் பொற்கால ஆட்சி குறித்து தலைவர்கள் உரையாற்றினர் பள்ளி மாணவர்களுக்கு சீருடை மற்றும் நோட்டு புத்தகம் உபகரணங்கள் மற்றும் பதநீர் வழங்கினர்.

இந்நிகழ்ச்சிக்கு உடன்குடி வட்டார காங்., கமிட்டி தலைவர் துரைராஜ் ஜோசப் தலைமை வகித்தார்.மாநில பொதுக்குழு உறுப்பினர் சிவ சுப்ரமணியன், நகர தலைவர் முத்து, முன்னாள் மாவட்ட பொருளாளர் நடராஜன், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ஜாண் இஸ்ரேல், மாவட்ட முன்னாள் கலை பிரிவு தலைவர் சித்திரைபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் . இதில் முன்னாள் வட்டார தலைவர் தேவராஜ், வட்டார மகிளா காங்., கலை அரசி, நகர மகிளா காங்., செல்வி, உடன்குடி டவுன் பஞ்., முன்னாள் கவுன்சிலர் சுலோச்சனா, மணப்பாடு கிராம காங்., தலைவர் ஜோசப், வட்டார முன்னாள் தலைவர் ஜெயராமன், வட்டார செயலாளர் பழனி வேல், வெங்கட்ராமனுஜபுரம் கிராம காங்., செயலாளர் தனபால், செட்டியாபத்து கிராம காங்., தலைவர் லிங்க வாசகன், உடன்குடி நகர வார்டு தலைவர்கள் அந்தோணி பெர்னாண்டோ, கோபாலகிருஷ்ணன், மந்திரம், லுக்காஸ், சிவ செந்தில், 10வது வார்டு பொருளாளர் ஜெயதாஸ், மற்றும் தேவதுரை,கோபாலகிருஷ்ணன், பிரபு , கதிரேசன், சேகர், மூக்கன், முத்தையா, அதிசய பாலன் உட்பட ஏராளமான காங்., கட்சியினர் பொது மக்கள் கலந்து கொண்டனர். முடிவில் உடன்குடி 10வது வார்டு தலைவர் ஹென்றி தாமஸ் நன்றி கூறினார்.

### குறும்பலாபேரியில்
## இலவச குழந்தைகள் மற்றும் இளையோர் நல முகாம் வரும் 20-ந் தேதி நடக்கிறது

**தென்காசி ஜூலை 18:**

கல்வித்தந்தை திரு.காங்கிரஸ் பொன்பாண்டியன் அறக்கட்டளை, பாண்டியராணிஅறக்கட்டளை, ப்ரோவிஷன் கண்மருத்துவமனை மற்றும் விஷ்ணுகுழந்தைகள் நல கிளினிக் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச குழந்தைகள் மற்றும் இளையோர் நல முகாம் ஜூலை..20-ல் குறும்பலாபேரியில் நடைபெற உள்ளது.

5 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் இளையோர் மட்டுமே அனுமதிக்கப்படும் இந்நிகழ்ச்சியினை தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார் துவக்கி வைக்க உள்ளார்.

இம்முகாமில் இலவச கண்பரிசோதனைகள் மற்றும் உடல் நல பரிசோதனைகள் செய்து ஆலோசனைகள் வழங்கப்பட உள்ளன. என் உடல் நலமும் எனது நல்வாழ்வும் என்ற இலவச கையேடு மற்றும் ஆரோக்கியமான உணவு முறை பற்றிய காணொளி காட்சியும் நடைபெறுகிறது. இவ்வாய்ப்பினை குறும்பலாபேரி, கீழப்பாவூர், பாவூர்சத்திரம், மேலப்பாவூர், சிவகாமிபுரம், கல்லூரணி, மத்தளம்பாறை, திப்பணம்பட்டி ஆகிய பகுதிகளை சார்ந்த குழந்தைகள் மற்றும் சிறார் தங்கள் பெற்றோரோடு கலந்து பயனடைய அறக்கட்டளை நிர்வாகிகள், ப்ரோவிஷன் மற்றும் விஷ்ணு கிளினிக் மருத்துவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

முகாம் காலை 9:30 மணிக்கு தொடங்கி மதியம் 1 மணிக்கு நிறைவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தென்காசி மாவட்டத்தில்
## சுற்றுச்சூழலை பாதிக்காமல் விநாயகர் சதுர்த்தி விழாவினை பொதுமக்கள் கொண்டாடி மகிழ கலெக்டர் வேண்டுகோள்

தென்காசி ஜூலை..18



தென்காசி மாவட்டத்தில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும் போது, விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கரைத்து, சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் நல்லாட்சியில் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தொன்று தொட்டுசிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில்மக்களாகியநமக்குமிகப்பெரியகடமைஇருக்கிறது. நீர்நிலைகள் (கடல், ஆறுமற்றும்குளம்நமக்குகுடிநீர்ஆதாரத்தைதருகிறது.

நீர்நிலைகளைபாதுகாக்கும்வகையில்வருகிறவிநாயகர்சதுர்த்திவிழாவினைகொண்டாடும்போது, விநாயகர்சிலைகளைநீ ர்நிலைகளில்கரைப்பதற்கானமத்தியமாசுகட்டுப்பாடுவழிகாட்டுதல்களின்படி (www.tnpcb.gov.inஎன்றஇணையதளத்தில்உள்ளது) மாவட்டநிர்வாகத்தினால்குறிப்பிடப்பட்டுள்ளஇடங்களில்மட்டும்கரைத்து, சுற்றுச்சூழலைபாதுகாக்கஒத்துழைப்புவழங்குமாறுஅன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, களிமண்ணால் செய்யப்பட்டதும்மற்றும்பிளாஸ்டர்ஆஃப்பாரிஸ் (PoP), பிளாஸ்டிக்மற்றும்தெர்மாகோல் (பாலிஸ்டிரின்) கலவையற்றதுமான, சுற்றுச்சூழலைபாதிக்காதமூலப்பொருள்களால்மட்டுமேசெய்யப்பட்டதுமானவிநாயகர்சிலைகளைநீர்நிலைகளில்பாதுகாப்பானமுறையில்கரைக்கஅனுமதிக்கப்படுகிறது. சிலைகளின்ஆபரணங்கள்தயாரிப்பதற்கு உலர்ந்தமலர்கூறுகள், வைக்கோல்போன்றவைபயன்படுத்தப்படலாம்.

மேலும், சிலைகளைபளபளப்பாகமாற்றுவதற்குமரங்களின்இயற்கைபிசின்கள்பயன்படுத்தப்படலாம். ஒருமுறைபயன்படுத்தும்பிளாஸ்டிக்மற்றும் தெர்மாக்கோல்பொருட்களைபயன்படுத்தகண்டிப்பாகஅனுமதிக்கப்படாது.

நீர்நிலைகள்மாசுபடுவதைதடுக்கும்பொருட்டு, வைக்கோல்போன்றசுற்றுச்சூழலுக்குஉகந்தபொருட்கள்மட்டுமேசிலைகள்தயாரிக்கஅல்லதுசிலைகள்/பந்தல்கள்களைஅலங்கரிக்கபயன்படுத்த வேண்டும்.சிலைகளுக்குவர்ணம்பூசுவதற்குநச்சுமற்றும்மக்காதஇரசாயனசாயம்/எண்ணெய்வண்ணப்பூச்சுகளைகண்டிப்பாகபயன்படுத்தக்கூடாது. சிலைகளின்மீதுஎனாமல்மற்றும்செயற்கைசாயத்தைஅடிப்படையாககொண்டவண்ணப்பூச்சுகளைபயன்படுத்தக்கூடாது, மாற்றாகசுற்றுச்சூழலுகுகந்தநீர்சார்ந்த / மக்கக்கூடிய / நச்சுகலப்பற்ற இயற்கைசாயங்கள்மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

சிலைகளைஅழகுபடுத்த வண்ணப்பூச்சுகள்மற்றும்பிற நச்சுஇரசாயனங்கள்கொண்ட பொருட்களுக்குபதிலாக, இயற்கைபொருட்கள்மற்றும் இயற்கைசாயங்களால்செய்யப்பட்டஅலங்காரஆடைகள் மட்டுமேபயன்படுத்தப்பட வேண்டும்.விநாயகர்சிலைகளைமாவட்டநிர்வாகத்தினால்குறிப்பிடப்பட்டுள்ளஇடங்களில்தமிழ்நாடுமாசுக்கட்டுப்பாடுவாரியத்தின்விதிமுறைகளின்படிகரைக்கஅனுமதிக்கப்படும். விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு - செய்ய வேண்டியவை, சுற்றுச்சூழலுக்கு உகந்த விநாயகர் சிலைகளைப் பயன்படுத்துங்கள்.சுற்றுச்சூழலுக்கு உகந்த விநாயகர் சிலைகளைப் பயன்படுத்துங்கள்.சிலைகளுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த நீர் சார்ந்த, இயற்கையாக மக்கக்கூடிய மற்றும் நச்சுத்தன்மையற்ற இயற்கை சாயங்களைப் பயன்படுத்துங்கள்.சுற்றுச்சூழலிற்கு உகந்த பூக்கள், இலைகள் மற்றும் துணிகளை பூஜை பொருட்களாக பயன்படுத்தவும்.அகற்றி துவைத்து மீண்டும் உபயோகிக்கக் கூடிய அலங்கார துணிகளையே அலங்காரத்திற்கு பயன்படுத்தவும்.பிரசாத விநியோகத்திற்கு மக்கும்/மீண்டும் பயன்படுத்தக்கூடிய தட்டுகள் மற்றும் கண்ணாடி கோப்பைகளை பயன்படுத்தவும்.பொறுப்புடன் குப்பைகளை பிரித்து அப்புறப்படுத்துங்கள்.அறிவிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே சிலைகளை கரைக்க வேண்டும்.எல்.இ.டி பல்புகள் போன்ற சுற்றுச்சூழலிற்கு உகந்த விளக்குகளை பயன்படுத்தவும்.அலங்கார பொருட்களை எதிர்கால பண்டிகைகளுக்கு சேமித்து பயன்படுத்தவும் விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு - செய்யக்கூடாதவை பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் (PoP) சிலைகளைப் பயன்படுத்த வேண்டாம்.சிலைகளை அலங்கரிப்பதற்கு, சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும், ஒரு முறை உபயோகித்து தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக், தெர்மாகோல் மற்றும் இரசாயணப் பொருட்கள் அல்லது சாயங்களை பயன்படுத்த வேண்டாம்.

சிலைகளின் மேல்பூச்சிற்கும் அலங்காரத்திற்கும் நச்சுத்தன்மையுள்ள மற்றும் மக்கும் தன்மையற்ற இரசாயன சாயங்கள்/எண்ணெய் வண்ணப்பூச்சுகளை பயன்படுத்த வேண்டாம்.சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும், ஒரு முறை உபயோகித்து தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோலாலான பொருட்களை பூஜை பொருட்களாக பயன்படுத்த வேண்டும்.

வண்ணப்பூச்சுக்கள் மற்றும் பிற நச்சு இரசாயனங்கள் கொண்ட ஒருமுறையே உபயோகித்து தூக்கியெறியக்கூடிய அலங்கார பொருட்களை பயன்படுத்த வேண்டாம்.பண்டிகையின் போது ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறியக் கூடிய பிளாஸ்டிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள் மற்றும் உறிஞ்சு குழாய்களை பயன்படுத்துவதை தவிர்க்கவும்.குப்பை மற்றும் கழிவுகளை பொறுப்பற்று கொட்ட வேண்டாம்.அனுமதி இல்லாத நீர் நிலைகளில் சிலைகளை கரைக்க வேண்டாம்.ஃபிலமென்ட் பல்புகளை விளக்குகளாக பயன்படுத்த வேண்டாம்.ஒற்றை உபயோக அலங்கார பொருட்களை பயன்படுத்த வேண்டாம். விநாயக சதுர்த்தி விழாவினை சுற்றுச்சூழலை பாதிக்காதவாறு கொண்டாடும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.

## தவறிவிட்டது

கடந்த 25.06.2025 ஆம் தேதியன்று என்னுடைய 10ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் SEC O182752/2012 பதிவு எண் 1099 4000 மற்றும் பள்ளி சான்றிதழ் (TC) எண் 180/21.06.2012 ஆகியவை சாத்தான்குளம் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள கடையில் நகல் எடுக்கச் சென்றபோது தவறி விட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தகவல்தெரிவிக்க வேண்டுகிறேன்.

செ.சுகந்தி, க/பெ.செல்வன்,
42, தஞ்சைநகரம், ஆலங்கிணறு,
புதுக்குளம்கிராமம்,
சாத்தான்குளம் - 628704,
9486558280

## தவறிவிட்டது

கடந்த 10.07.2025 அன்று மீனாட்சிபுரத்திலிருந்து பைக்கில் செங்கோட்டை செல்லும் வழியில் எனது ஒரிஜினல் கிரைய ஆவணம் எண். 133/2003 (பண்பொழி சப்ரி அலுவலகம்) வைத்திருந்த பை காணாமல் போய்விட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் கொடுத்து உதவ வேண்டுகிறேன்.

க. பாண்டி,
த.பெ. கருப்பசாமி தேவர்,
க.எண். 38 A, பிள்ளையார் கோவில் தெரு,
மீனாட்சிபுரம், தேன்பொத்தை,
செங்கோட்டை வட்டம்.
செல். 7639007426.

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**
**அ.தி.மு.ஆ1/216/2025**

க.ஸ்ரீரங்கதேவி, க.பெ. முத்தரசு,
க.எண். 3/45, சர்ச் தெரு,
கல்லுப்பட்டி, மீனாட்சிபுரம்,
இராஜபாளையம்.
மனுதார்,

1. வட்டாட்சியர், சங்கரன்கோவில்,
2. சார் பதிவாளர், கரிவலம்வந்தநல்லூர்,
எதிர்மனுதாரர்,

அறிவிப்பு

எனது தந்தை வழி தாத்தா கிருஷ்ணன், த.பெ. சூரியன் என்பவர் கடந்த 14.01.1981 அன்று 1/242, தெற்கு தெரு, பருவக்குடி கிராமம், சங்கரன்கோவில் வட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

க. ஸ்ரீரங்கதேவி,
கல்லுப்பட்டி.

---

**வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்டநடுவர் மன்றம், தென்காசி**
**இ.பதிவேட்டுஎண். 13/2025**

மாரியப்பா த/பெ. சுப்பையா
கதவு எண்:2/2/73-I தெற்கு தெரு லாலாகுடியிருப்பு.
புதூர் பேரூராட்சி
செங்கோட்டை தாலூகா
தென்காசி மாவட்டம்

மனுதார் அறிவிப்பு

எனது தாயார் கணபதி அம்மாள் கடந்த 9-8-1995ம்ஆண்டு மேற்கண்ட முகவரியில் வைத்து இறந்தார். அவரது இறப்பினை பதிவு செய்யப்படவில்லை மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15.தினத்திற்குள் தென்காசி கோட்டாச்சித் தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மாரியப்பா
மனுதார்
நாள்: 18-7-2025

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**

பாத்திமா, கபெ. நஜிம்,
1K,, பள்ளிவாசல் வீதி,
கழுகுமலை,
கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்

எதிர்
வட்டாட்சியர், கோவில்பட்டி.
சார் பதிவாளர், கோவில்பட்டி.
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது மகள் நஜிமா த/பெ. நஜிம் என்பவர் கடந்த 01.07.1989. அன்று மேற்படி முகவரியில் வைத்து பிறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
பாத்திமா,
மனுதார்,

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**

பார்வதியம்மாள்
கபெ. பிச்சையா பிள்ளை,
83, சன்னதித்தெரு,
பசு வந்தனை,
ஓட்டப்பிடாரம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்

எதிர்
வட்டாட்சியர், ஓட்டப்பிடாரம்.
சார் பதிவாளர், கடம்பூர்.
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது மகன் முருகன் த/பெ. பிச்சையா பிள்ளை என்பவர் கடந்த 10.07.1996. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
பார்வதியம்மாள்
மனுதார்,

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

ச. சரவணன்,
த.பெ. சக்திவேல்,
க.எண். 1/94, வடக்கு தெரு,
சுப்புலாபுரம், வயலி கிராமம்,
சங்கரன்கோவில் வட்டம்.
மனுதார்,

1. வட்டாட்சியர், சங்கரன்கோவில்,
2. சார் பதிவாளர், கரிவலம்வந்தநல்லூர்,
எதிர்மனுதாரர்,

அறிவிப்பு

எனது தந்தையின் உடன் பிறந்த மூத்த சகோதரி லட்சுமி, க.பெ. இராமசாமி என்பவர் கடந்த 21.03.1980 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ச. சரவணன்,
சுப்புலாபுரம்.

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**

சண்முக கனி,
தபெ. முருகன்,
5/31, கிழக்குத் தெரு, ஈராச்சி,
எட்டையாபுரம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்

எதிர்
வட்டாட்சியர், எட்டையாபுரம்.
சார் பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது தகப்பனார் முருகன் த/பெ. சுப்பையா என்பவர் கடந்த 25.05.2002. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
சண்முக கனி,
மனுதார்,

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**

சீனிவாசன், தபெ. கந்தசாமி,
536, இந்திரா நகர், இனாம் மணியாச்சி, கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்

எதிர்
வட்டாட்சியர், விளாத்திகுளம்.
சார் பதிவாளர், எட்டயபுரம்.
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது மனைவி அம்சவேணி என்பவர் கடந்த 07.12.1960. அன்று ஸ்ரீரெங்கபுரம் கிராமம், கழுகாசலபுரம் அஞ்சல், அருங்குளம் பஞ்சாயத்து, விளாத்திகுளம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து பிறந்ததைமேற்படி.எதிர்மனுதாரர்கள் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
சீனிவாசன்,
மனுதார்,

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**

கீர்த்திகா,
கபெ. செல்லத்துரை,
3/4, வடக்கு த்தெரு,
ஆவுடையம்மாள் புரம்,
கட்டாரங்குளம், கயத்தாறு தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்

எதிர்
வட்டாட்சியர், கயத்தார்.
சார் பதிவாளர், கழுகுமலை
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது மாமனார் குருசாமி த/பெ. தாமரை கண்ணு தேவர் என்பவர் கடந்த 28.05.2002. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
கீர்த்திகா,
மனுதார்,

---

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**

முத்துலட்சுமி,
கபெ. முத்துச்சாமி
2/94, கீழ த்தெரு,
மேலசெய்த்தலை,
ஜெகவீரபாண்டியபுரம்,
ஓட்டப்பிடாரம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்

எதிர்
வட்டாட்சியர், ஓட்டப்பிடாரம்.
சார் பதிவாளர், ஓட்டப்பிடாரம்.
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது மகன் நந்தீஸ்வரர் என்பவர் கடந்த 06.12.2018. அன்று மேற்படி முகவரியில் வைத்து பிறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
முத்துலட்சுமி,
மனுதார்,

# பெங்களூரு கூட்ட நெரிசலுக்கு ஆர்.சி.பி. அணியே முழு பொறுப்பு

## கர்நாடக அரசு அறிக்கை தாக்கல்



**பெங்களூரு, ஜூலை 18-**
பெங்களூரு கூட்ட நெரிசலுக்கு ஆர்.சி.பி. அணியே முழு பொறுப்பு என்று கர்நாடக அரசு அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

**ஐ.பி.எல். சாம்பியன்...**
நடந்து முடிந்த 2025 ஐ.பி.எல். போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி கோப்பையை கைப்பற்றியது. சாம்பியன் பட்டத்தை வென்றதையடுத்து, ஆர்.சி.பி. அணி வீரர்கள் ஐ.பி.எல். கோப்பையுடன் பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் கடந்த ஜூன் 4 ஆம் பேரணி நடத்தினர். மாநில அரசு, கர்நாடக கிரிக்கெட் சங்கம் சார்பில் பாராட்டு விழாவும் நடைபெற்றது. இதில் பங்கேற்கச் சென்ற பார்வையாளர்கள் 11 பேர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர். 33 பேர் காயமடைந்தனர்.

**கூட்ட நெரிசல்...**
இதுதொடர்பாக ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி, கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கம், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீது பெங்களூரு காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர். கர்நாடக ஐகோர்ட்டும் தாமாக முன்வந்து இதுதொடர்பான வழக்கை விசாரித்து வருகிறது. கர்நாடக கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக நீதிபதி தலைமையில் ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையமும் அண்மையில் அறிக்கையும் தாக்கல் செய்தது.

**ஆர்.சி.பி. அணி நிர்வாகம்...**
இந்த நிலையில், விசாரணையை அறிக்கையை கோர்ட்டில் கர்நாடக அரசு தாக்கல் செய்துள்ளது.அதில் கூறப்பட்டுள்ளதாவது:- 11 பேர் உயிரிழப்புக்கு காரணமான கூட்ட நெரிசலுக்கு ஆர்.சி.பி. அணி நிர்வாகம் தான் காரணம். காவல்துறையிடம் எந்த அனுமதியும் பெறாமல் வெற்றி கொண்டாட்டத்திற்கு ஆர்.சி.பி. நிர்வாகம் அழைப்பு விடுத்திருந்தது. வெற்றி கொண்டாட்டம் நடத்துவதாக காவல்துறைக்கு தகவல் மட்டுமே தெரிவிக்கப் பட்டது. ஜூன் 4-ம் தேதி காலை 8:55 மணிக்கு வெற்றியை பெங்களூரு மக்களுடன் கொண்டாட விரும்புவதாக விராட் கோலி பதிவிட்டு இருந்தார். கூட்ட நெரிசலுக்கு முழுக்க முழுக்க ஆர்.சி.பி. நிர்வாகமே காரணம்" என்று கூறப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## மகளிர் முதல் ஒருநாள் போட்டி:

# இங்கிலாந்தை வீழ்த்தியது இந்தியா



**சவுத்தம்டான், ஜூலை 18-**
இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், இந்திய மகளிர் அணி வெற்றி பெற்றது.

**சுற்றுப்பயணம்...**
ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட டி20 ஓவர் தொடரை இந்திய அணி 3-2 என்ற கணக்கில் வென்று வரலாறு படைத்தது.

**258 ரன்கள் குவிப்பு...**
அடுத்ததாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. இதன்படி இந்தியா- இங்கிலாந்து இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி சவுத்தம்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 258 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக சோபியா டங்க்லி 83 ரன்களும், டேவிட்சன் ரிச்சர்ட்ஸ் 53 ரன்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் கிராந்தி கவுட் மற்றும் சினே ராணா தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

**இந்திய அணி வெற்றி...**
இதனையடுத்து 259 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி இங்கிலாந்து பந்துவீச்சை எளிதில் சமாளித்து வெற்றியை நோக்கி பயணித்தது. 48.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த இந்திய அணி 262 ரன்கள் அடித்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தியா தரப்பில் தீப்தி சர்மா 62 ரன்களும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 48 ரன்களும் அடித்து வெற்றிக்கு வித்திட்டனர். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

# அணியிலிருந்து கருண் நாயர் நீக்கப்படுகிறார்? பரபரப்பு தகவல்



**லண்டன், ஜூலை 18-**
கருண் நாயருக்கான நேரம் முடிந்துவிட்டதாகவும், அடுத்த போட்டிக்கான பிளேயிங் லெவனில் அவர் இடம்பெற வாய்ப்பில்லை எனவும் கூறப்படுகிறது.

**இங்கி. முன்னிலை...**
இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இதுவரை மூன்று போட்டிகள் நிறைவடைந்துள்ளன. அதில் இரண்டு போட்டிகளில் இங்கிலாந்து அணியும், ஒரு போட்டியில் இந்தியாவும் வெற்றி பெற்றுள்ளது.

**இடம்பெறுவாரா?...**
முதல் மூன்று போட்டிகளில் கருண் நாயர் இந்திய அணியின் பிளேயிங் லெவனில் இடம்பெற்றார். இந்த போட்டிகளில் அவருக்கு கிடைத்த நல்ல தொடக்கத்தை பெரிய இன்னிங்ஸாக அவரால் மாற்ற முடியவில்லை. இதன் காரணமாக, இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான நான்காவது டெஸ்ட் போட்டியின் பிளேயிங் லெவனில் அவர் இடம்பெறுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

**சாய் சுதர்ஷனை...**
இது தொடர்பாக இந்திய அணியின் முன்னாள் விக்கெட் கீப்பரும், கிரிக்கெட் வர்ணனையாளருமான தீப் தாஸ்குப்தா பேசியதாவது: இந்திய அணியின் பிளேயிங் லெவனில் சாய் சுதர்ஷனை மீண்டும் சேர்க்கும் நேரம் வந்துவிட்டது என நினைக்கிறேன். லார்ட்ஸ் டெஸ்ட்டில் வெற்றிக்கு மிக அருகில் சென்று இந்திய அணி தோல்வியடைந்தது. இந்த போட்டியில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இரண்டு அணிகளுக்கும் இருந்தது.


**வாய்ப்பளிக்க வேண்டுமா?...**
இந்த போட்டியில் நான் 3-வது வீரராக களமிறங்கும் கருண் நாயரை கவனித்தேன். இளம் வீரரான சாய் சுதர்ஷனுக்கு வாய்ப்பளிக்காமல் தொடர்ச்சியாக கருண் நாயருக்கு வாய்ப்பளிக்க வேண்டுமா? முதல் டெஸ்ட்டின் இரண்டாவது இன்னிங்ஸில் சாய் சுதர்ஷன் நன்றாக விளையாடினார். அணியின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர் பிளேயிங் லெவனில் சேர்க்கப்பட வேண்டும் என்றார். இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான நான்காவது டெஸ்ட் போட்டி ஜூலை 23 முதல் மான்செஸ்டரில் தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

# இளம் வீரருக்கு மெஸ்ஸியின் ஜெர்ஸி

பார்சிலோனா அணியின் புதிய நம்.10 ஜெர்ஸி இளம் வீரர் லாமின் யமாலுக்கு வழங்கப்பட்டது. ஸ்பெயினைச் சேர்ந்த லாமின் யமால் (18 வயது) பார்சிலோனா அணிக்காக 2023ஆம் ஆண்டிலிருந்து விளையாடி வருகிறார். பார்சிலோனா அணியில் ஃபார்வேடாக விளையாடும் லாமின் யமால் 25 கோல்கள், 34 அசிஸ்ட்ஸ் செய்துள்ளார். ஸ்பெயினின் தேசிய அணிக்காகவும் விளையாடி வருகிறார்.

மெஸ்சியின் எண்ணான நம்.10 கொண்ட ஜெர்ஸியை தற்போது லாமின் யமாலுக்கு வழங்கப்பட்டுள்ளது. பார்சிலோனா அணியில் லாமின் யமாலுக்கு 6 ஆண்டுகள் (2031 வரை) ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட லாமின் யமால் தனது பாட்டியை அழைத்து வந்தார். முதன்முதலாக பார்சிலோனாவின் பயிற்சி கூடமான லா மசியாவில் இவரைச் சேர்த்ததுமுதல் இவரது பாட்டி உடன் இருந்திருக்கிறார். அதனால், அவரை வரவழைத்து இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இருக்கிறார். பார்சிலோனா அணிக்கு அடுத்த மெஸ்ஸியாக வருவார் என ரசிகர்கள் இவரது திறமையைப் பார்த்துப் புகழ்ந்து வருகிறார்கள்.

# கார்ல்சனை வீழ்த்திய பிரக்ஞானந்தா



கிராண்ட் செஸ் சுற்றுப் பயணத்தின் அங்கமான பிரீஸ்டைல் சர்வதேச செஸ் போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் லாஸ் வேகாஸில் நேற்று நடைபெற்ற 4வது சுற்றில் நம்பர் 1 வீரரான மார்க்ஸ் கார்ல்சன் ( நார்வே ), பிரக்ஞானந்தா ( இந்தியா ) ஆகியோர் மோதினர்.

இந்த ஆட்டத்தில் வெள்ளை நிற காய்களுடன் பிரக்ஞானந்தா விளையாடினார் . சிறப்பாக செயல்பட்ட பிரக்ஞானந்தா கார்ல்சனை வீழ்த்தி வெற்றி பெற்றார் . இதனால் 4.5 புள்ளிகளுடன் பிரக்ஞானந்தா முதலிடத்தில் உள்ளார்

# இளையோர் முதல் டெஸ்ட் டிரா

இந்தியா -இங்கிலாந்து ஜூனியர் கிரிக்கெட் (19 வயதுக் குட்பட்டோர்) அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பெக்கன்ஹாமில் நடைபெற்றது. இதில் டாஸ் வென்று பேட்டிங் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 540 ரன்கள் குவித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 439 ரன்கள் அடித்த நிலையில் ஆல் அவுட் ஆனது.

பின்னர் 101 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 248 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு 350 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி 4-வது மற்றும் கடைசி நாளில் 7 விக்கெட்டுக்கு 270 ரன்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டம் டிராவில் முடித்து கொள்ளப்பட்டது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி செல்ம்ஸ்போர்டில் வருகிற 20-ந் தேதி தொடங்குகிறது.

# அதிகம் யோசிக்கவில்லை: தீப்தி

இந்திய மகளிரணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டி20 மற்றும் ஒருநாள் தொடர்களில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான டி20 தொடர் நிறைவடைந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நேற்று முன்தினம் (ஜூலை 16) தொடங்கியது. முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி அசத்தியது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 62 ரன்கள் எடுத்து கடைசி வரை களத்தில் இருந்த தீப்தி சர்மா, ஆட்ட நாயகியாக தேர்வு செய்யப்பட்டார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடி வரும் நிலையில், ஒருநாள் உலகக் கோப்பைத் தொடர் குறித்து அதிகம் யோசிக்கவில்லை என தீப்தி சர்மா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசியதாவது: ஒருநாள் உலகக் கோப்பைத் தொடரை பொருத்தவரையில், ஒரு அணியாக இலங்கை மற்றும் இந்தியாவில் நாங்கள் சிறப்பாக செயல்பட்டுள்ளோம். உலகக் கோப்பைத் தொடர் தொடங்குவதற்கு இன்னும் நாள்கள் இருக்கின்றன. அதனால், உலகக் கோப்பை குறித்து அதிகம் யோசிக்கவில்லை. ஒரு நேரத்தில் ஒரு போட்டியில் மட்டுமே நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம் என்றார். ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் உலகக் கோப்பைத் தொடர் வருகிற செப்டம்பர் 30 ஆம் தேதி முதல் தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. வீரர்கள் ஆதிக்கம்

கிரிக்கெட் உலகில் அதிகமான உலகக் கோப்பைகளை வென்றுள்ள ஆஸ்திரேலிய அணி டெஸ்ட் போட்டிகளிலும் அசத்தி வருகிறது. கடந்த 2021- 23 சீசன் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பை வென்ற ஆஸி. சமீபத்தில் 2023-25 சீசனில் தென்னாப்பிரிக்காவிடம் இறுதிப் போட்டியில் தோற்றது. தற்போது, மேற்கிந்தியத் தீவுகளுடன் உடனான டெஸ்ட் தொடரில் 3-0 என அபாரமாக வென்றது. குறிப்பாக, கடைசி டெஸ்ட் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. அதில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை கடைசி இன்னிங்ஸில் 27 ரன்களுக்கு சுருட்டி ஆதிக்கம் செலுத்தியது.

இந்நிலையில், ஐ.சி.சி. தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது. இதில், ஆஸ்திரேலியாவின் 5 பந்துவீச்சாளர்கள் ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் டாப் 10-க்குள் இடம் பிடித்துள்ளார்கள். ஐ.சி.சி. டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் தரவரிசை வருமாறு., 1. ஜஸ்ப்ரீத் பும்ரா - 901 புள்ளிகள் (இந்தியா),2. ககிசோ ரபாடா - 851 புள்ளிகள் (தென்னாப்பிரிக்கா), 3. பாட் கம்மின்ஸ் - 838 புள்ளிகள் (ஆஸ்திரேலியா), 4. ஜோஷ் ஹேசில்வுட் - 815 புள்ளிகள் (ஆஸ்திரேலியா), 5. நோமன் அலி - 806 புள்ளிகள் (பாகிஸ்தான்), 6. ஸ்காட் போலண்ட் - 784 புள்ளிகள் (ஆஸ்திரேலியா), 7. மாட் ஹென்றி - 782 புள்ளிகள் (நியூசிலாந்து), 8. நாதன் லயன் - 769 புள்ளிகள் (ஆஸ்திரேலியா), 9. மார்கோ யான்சென் - 767 புள்ளிகள் (தென்னாப்பிரிக்கா), 10. மிட்செல் ஸ்டார்க் - 766 புள்ளிகள் (ஆஸ்திரேலியா).

# கமல்ஹாசன் உடன் திருமாவளவன் சந்திப்பு

**சென்னை, ஜூலை 18-**
ம.நீ.ம. தலைவர் கமல் ஹாசனை திருமாவளவன் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல் ஹாசன் வருகிற 25ஆம் மாநிலங்களவை எம்.பி.யாக பதவி ஏற்க இருக்கிறார். இதனைத் தொடர்ந்து விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், அவரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யம் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சிகள் திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன. 2024 மக்களவை தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சி, திமுக கூட்டணியில் இடம் பிடித்தது. மக்களவை தொகுதி ஏதும் பெறாமல் தேர்தல் பிரசாரம் மட்டும் மேற்கொண்டது. இதற்குப் பதிலாக ஒரு மாநிலங்களவை எம்.பி. இடம் வழங்கப்படும் என தி.மு.க. தெரிவித்தது. அதன்படி ஒரு இடத்தை வழங்கியது. இதனைத் தொடர்ந்து மாநிலங்களவை எம்.பி.யாக தேர்வு செய்யப்பட்டார்.

# ஓட்டு கேட்கும் விவகாரம் 3 நாட்களில் அம்பலத்திற்கு வரும்: ராமதாஸ் உறுதி

**விழுப்புரம், ஜூலை 18-**
''ஒட்டு கேட்கும் விவகாரம் 3 நாட்களில் அம்பலத்திற்கு வரும்'' என பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம், தைலாபுரத்தில் நிருபர்களிடம் ராமதாஸ் கூறியதாவது: தேர்தலுக்கு இன்னும் மாதங்கள் இருக்கிறது. கொஞ்சம் வெயிட் பண்ணுங்கள். அந்த நேரத்தில் உங்கள் யோசனைகளையும் கேட்கிறேன். யாருடன் கூட்டணி வைக்க வேண்டும் என்று யோசனை சொல்வீர்களா?

ஒட்டு கேட்கும் கருவி வைக்கப்பட்டது, யார் வைத்தார்கள். யார் இங்கே கொண்டு வந்து சார்ஜ் போட்டார்கள், யார் சொல்லி வைத்தார்கள் என்பது எல்லாம் விசாரணையில் இருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று நாட்களில், அது அம்பலத்திற்கு வரும். இவ்வாறு ராமதாஸ் கூறினார்.

இதையடுத்து, நிருபர் ஒருவர், ''இதில் யார் மீதாவது உங்களுக்கு சந்தேகம் இருக்கிறதா? என கேள்வி எழுப்பினார். இதற்கு, ''சந்தேகம் இருக்கிறது. உங்கள் மேல் தான் இருக்கிறது'' என ராமதாஸ் பதில் அளித்துவிட்டு சிரித்தார்.

பின்னர், ''போலீசார் விசாரணை தொடங்கி விட்டனர். இன்று (நேற்று) காலையில் 8 பேர் வந்து முதற்கட்ட விசாரணை நடத்தினர். சைபர் கிரைம் சைபருக்கு கீழே மைனசாக போய்ட்டாங்க, சைபர் கிரைம் ஒன்று தமிழகத்தில் ஒன்று இருக்கிறதா, இல்லை. இவ்வாறு ராமதாஸ் கூறினார்.




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025 போட்டி அறிவிப்பு குறித்த செய்தியாளர் சந்திப்பு நிகழ்ச்சி, சென்னையில் நேற்று நடைபெற்றது.



அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான, எடப்பாடி கே பழனிசாமி சுற்றுப்பயணத்தின்போது கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி பிரச்சாரத்தின்போது, உடையார்குடி, சதுக்கத்தில் அமைந்துள்ள, இந்திய மனித உரிமைக் கட்சியின் நிறுவனரும், முன்னாள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினருமான இளையபெருமாள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் அமைப்புச் செயலாளர் முருகுமாறன், கடலூர் கிழக்கு ாவட்ட செயலாளர் பாண்டியன் உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

# கம்யூனிஸ்டுகளை இ.பி.எஸ். அழைப்பது நகைச்சுவையாக உள்ளது: முத்தரசன்

**சென்னை, ஜூலை 18-**
கம்யூனிஸ்டு கட்சிகளை இ.பி.எஸ். அழைப்பது நகைச்சுவையாக உள்ளது என முத்தரசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி 'மக்களை காப்போம். தமிழகத்தை மீட்போம்' என்ற முழக்கத்தை முன் வைத்து கோவையில் பிரசாரத்தை தொடங்கினார். தமிழகத்தை மீட்போம் என்ற முழக்கமே இந்திய கம்யூனிஸ்டு கட்சி சென்ற சட்டமன்றத் தேர்தலில் சொன்னது. அந்த தேர்தலில் அ.தி.மு.க. பி.ஜே.பி.யோடு இருந்த காரணத்தினால் தமிழகம் ஒட்டுமொத்தமாக பி.ஜே.பி.யால் வளைக்கப்படுகிறது. கபளீகரம் செய்யப்படுகிறது.

ஆகவே தமிழகத்தை மீட்க வேண்டும் என்கிற அரசியல் முழக்கத்தை நாங்கள் வைத்தோம். அந்த முழக்கத்தை இரவலாக பெற்று இப்போது எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்கிறார். அவர் கோவையில் பேசுகிற போது, கம்யூனிஸ்டுகளே இல்லை. அவர்களது முகவரியே இல்லை. காணாமல் போய் விட்டார்கள் என்று மேட்டுப்பாளையம் கூட்டத்தில் பேசினார்.

ஒரு வாரம் இடைவெளியில் என்ன ஞானஸ்தானம் பெற்றார் என தெரியவில்லை. கம்யூனிஸ்டுகள், வி.சி.க. போன்ற கட்சிகள் எங்கள் அணிக்கு வர வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். கோவையில் கம்யூனிஸ்டு கட்சிகள் இல்லை என்று கூறிவிட்டு சிதம்பரத்தில் கம்யூனிஸ்டு கட்சி எங்கள் அணிக்கு வர வேண்டும் என்று பேசுவது நல்ல நகைச்சுவையாகும்.

எங்கள் அணிக்கு வந்தால் ரத்ன கம்பளம் விரித்து வரவேற்போம் என்றும் சொல்லி இருக்கிறார். அவர் ஏற்கனவே சேர்ந்திருக்கிற பா.ஜ.க. அணி ரத்ன கம்பளம் அல்ல ரத்தக்கறை படிந்த கம்பளம். அந்த ரத்தக்கறை படிந்த கம்பளத்தில் எடப்பாடி பயணம் பண்ணுகிறார். அதன் ஆபத்தை உணராமல் அல்லது ஆபத்தை உணர்ந்தும் தனக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாக அவர் பயணம் பண்ணுகிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆகாஷ் பிரைம் வான் பாதுகாப்பு அமைப்பு சோதனை வெற்றி

**கார்கில், ஜூலை 18-**
முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆகாஷ் பிரைம் வான் பாதுகாப்பு அமைப்பு வெற்றிகரமாக பரிசோதித்து பார்க்கப் பட்டது.

முப்படைகளுக்கு தேவையான ஆயுதங்களை ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் (டி.ஆர்.டி.ஓ.) தயாரித்து சோதனை செய்து வருகிறது. பல கட்ட வெற்றிகர பரிசோதனைக்குப்பின் இந்த ஆயுதங்கள் படையில் சேர்க்கப்படும். அந்த வகையில், இடி-எல்.டி.எச்.சி.எம். ஹைபர்சோனிக் ஏவுகணை சோதித்து பார்க்கப்பட்டது. இது ஒலியை விட 8 மடங்கு வேகத்தில் (மேக் 8) அதாவது மணிக்கு 11,000 கி.மீ வேகத்தில் செல்லும். இந்த ஏவுகணை சோதனை வெற்றிகரமாக முடிந்தது.

இந்த நிலையில் முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆகாஷ் பிரைம் வான் பாதுகாப்பு அமைப்பு நேற்று முன்தினம் பரிசோதித்து பார்க்கப்பட்டது. இலக்குகளை வானிலேயே தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட இந்த ஆகாஷ் பிரைம் சோதனை லடாக்கில் நேற்று முன்தினம் வெற்றிகரமாக நடைபெற்றது.

சோதனையின் போது இலக்குகளை துல்லியமாக ஆகாஷ் பிரைம் வான் பாதுகாப்பு அமைப்பு அழித்ததாகவும், சவாலான தட்ப வெப்ப நிலையிலும் திறம்பட செயல்படும் வகையில் இந்த சிஸ்டம் வடிவமைக்கப்பட்டு இருப்பதாகவும் டி.ஆர்.டி.ஓ அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த ஆகாஷ் பிரைம் வான் பாதுகாப்பு அமைப்பை 4,500 மீட்டர் உயரத்தில் நிலைநிறுத்த முடியும் மற்றும் சுமார் 25-30 கிமீ தொலைவில் உள்ள இலக்குகளை தாக்கும் வல்லமை கொண்டது.

# 1,035 சிறப்பு பஸ்கள் இயக்கம்

## போக்குவரத்துக்கழகம் அறிவிப்பு

**சென்னை, ஜூலை 18-**
வார இறுதி நாட்களில் 1,035 சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் என அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு நாளை (வெள்ளிக்கிழமை) 355 பஸ்களும், சனிக்கிழமை 350 பஸ்களும் இயக்கப்படும்.

சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை (வெள்ளிக்கிழமை) 55 பஸ்களும், சனிக்கிழமை 55 பஸ்களும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய இடங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பஸ்களும், மாதவரத்தில் இருந்து நாளை மற்றும் சனிக்கிழமை 20 பஸ்களும் என மொத்தம் 1,035 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

மேலும், ஞாயிற்றுக்கிழமை (20-ந்தேதி) சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

### விருதுநகரில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு

# 14 புதிய மருத்துவ கட்டிடங்களை அமைச்சர்கள் திறந்து வைத்தனர்



**விருதுநகர், ஜூலை 18-**

விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் கன்னிச்சேரி புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் துணை சுகாதார நிலைய புதிய மையங்கள், வட்டார சுகாதார அலகு, அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம் என மொத்தம் ரூ.5.95 கோடி மதிப்பிலான 14 புதிய மருத்துவ கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா, தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் ரகுராமன் சீனிவாசன் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், அமைச்சர் தங்கம் தென்னரசு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

அதன்படி, நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், நரிக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், நரிக்குடி ஊராட்சி நாலூர் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம், திருச்சுழி ஊராட்சி ஒன்றியம், பரளச்சியில் ரூ.120 இலட்சம் மதிப்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், கன்னிச்சேரிபுதூரில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், பட்டம்புதூரில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சிதம்பராபுரத்தில் ரூ.45 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம், அருப்புக்கோட்டையில் ரூ.30 இலட்சம் மதிப்பில் மலையரசன் கோவில் தெரு புதிய நகர்புற துணை சுகாதார நிலைய கட்டிடம்.

ராஜபாளையம் நகராட்சியில் ஜமீன்கொல்லன்கொண்டான் கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், சிவகாசி ஸ்டாண்டர்டு காலனியில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம், சிவகாசி மாநகராட்சியில் பெரியார் நகரில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம், வெம்பக்கோட்டை ஊராட்சியில் எதிர்க்கோட்டை கிராமத்; தில் ரூ.35 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம், கொங்கன்குளம் ஊராட்சியில் ரூ.35 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம், சிவகாசி மாநகராட்சி கிருஷ்ணாபுரம் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம், பள்ளப்பட்டி ஊராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம் என என மொத்தம் ரூ.5.95 கோடி மதிப்பிலான 14 புதிய மருத்துவ கட்டிடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில், விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் ஜெயசிங், மாவட்ட சுகாதார அலுவலர் .யசோதாமணி, அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ரூ.1 கோடியே 20 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம்

### அமைச்சர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தனர்



**மேலூர், ஜூலை 18-**

மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 26-ல் மில் கேட் திருவாதவூர் சாலையில் 15 வது நிதிக்குழுமம் மானியம் திட்டத்தின் கீழ் ரூபாய் 1 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மதுரையிலிருந்து காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இந் நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமை தாங்கினார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் முன்னிலை வகித்தார்.

அதனை தொடர்ந்து மில் கேட்டில் கட்டப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார கட்டிடத்தில் மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின், மேலூர் நகராட்சி பொறியாளர் (பொறுப்பு) ஆணையாளர் முத்துக்குமார், மேலூர் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் அம்பலம் சிவநேசன், மேலூர் நகராட்சி துணைத் தலைவர் இளஞ்செழியன், 26வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் கலைச்செல்வி செந்தில்குமார், 27 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் வசந்தா ராஜா ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் ஜாய்ஸ்ஆனி, நகராட்சி மேலாளர் மாதவன், ஓவர்சியர் உலகநாதன், ஒப்பந்ததாரர் ஏ.எஸ்.கே. சுந்தரமூர்த்தி, 26, 27 வார்டு பொதுமக்கள், செவிலியர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருமங்கலம் பிரதான கால்வாயில்

# தண்ணீர் திறந்து விட தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை



**திருமங்கலம், ஜூலை 18-**

திருமங்கலம் பிரதான கால்வாயில் தண்ணீர் திறந்து விட வலியுறுத்தி உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் திருமங்கலத்தில் நடைபெற்ற முகாமில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை மனு அளித்தனர்.

மதுரை மாவட்டத்தில் போதிய மழை பெய்யாததால் திருமங்கலத்தை சுற்றியுள்ள அனைத்து கண்மாய்கள்களும் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது. அதே போல் திருமங்கலம் நகர் மற்றும் சுற்றுப்புற கிராமப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. எனவே திருமங்கலம் பகுதியில் நிலவிடும் வறட்சியை சமாளித்திடும் வகையில் திருமங்கலம் பிரதான கால்வாயில் வைகை தண்ணீரை திறந்து விட்டு திருமங்கலம் சுற்றுப்புற கண்மாய்களில் ஆடு, மாடு வளர்ப்பதற்கும் விவசாய பணிகள் செய்வதற்கும், பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கும் தண்ணீர் திறக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி திருமங்கலம் ஆர்.டி.ஓ சிவஜோதி,தாசில்தார் சுரேஷ் பிரடெரிக் கிளமெண்ட் ஆகியோரிடம் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நிர்வாகி சந்தானம் மனு அளித்தார். மனுவினை பெற்றுக் கொண்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

### அருப்புக்கோட்டை அருகே

# விவசாயிகள் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டம்



**அருப்புக்கோட்டை, ஜூலை 18-**

அருப்புக்கோட்டை அருகே கோவிலாங்குளம் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலைய நிலங்களை சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க எடுக்க கூடாது என வலியுறுத்தி காவிரி வைகை கிருதுமால் குண்டாறு பாசன விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் ராம் பாண்டியன் மாவட்டச் செயலாளர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் தலைமை வகித்தனர். கோவிலாங்குளம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் பாலசுப்பிரமணியன், பெண் விவசாயிகள் சங்கம் தலைவர் வாசுகி, மாவட்ட இணைச் செயலாளர ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட சுமார் 200 பேர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் அர்ச்சுணன் , மாநில செயலாளர் இராம முருகன், இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் முகவை மலைச்சாமி ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள். தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தவெக நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கி ஆதரவு தெரிவித்தனர். நாம் தமிழர் கட்சி சார்பில்பால்பாண்டி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். நிறைவாக பண்ணை மூன்றடைப்பு அர்ஜூனன் நன்றி கூறினார்.

### சாணார்பட்டி அருகே

# வெவ்வேறு சம்பவங்களில் வாலிபர் உள்பட 2 பேர் பலி

**நத்தம், ஜூலை 18-**

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி ஒன்றியம் வேம்பார்பட்டி அருகே செடிப்பட்டியைச் சேர்ந்தவர் மாயழகன். இவரது மகன் கோகுல கண்ணன் (வயது 22). இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. இந்த நிலையில் இவர் கடந்த 7 மாதங்களுக்கு முன்பாக நடைபெற்ற சாலை விபத்தில் பலத்த காயம் அடைந்தார்.அதன் பின்னர் வீட்டிலேயே இருந்து மருத்துவ சிகிச்சை மேற்கொண்டார்.

இந்த நிலையில் கோகுல கண்ணனுக்கு திடீரென நேற்று மூச்சுத் திணறல் ஏற்பட்டது.இதனை யடுத்து அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி கோகுல கண்ணன் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து நத்தம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன். சாணார்பட்டி போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பொன் குணசேகர் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதைப் போலவே சாணார்பட்டி ஒன்றியம் அதிகாரிப்பட்டி அருகே கொத்தப்புளி பட்டியை சேர்ந்தவர் ரவி (57). கூலித் தொழிலாளி. இவர் நேற்று வீட்டின் அருகே நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது திடீரென நிலை தடுமாறி கீழே விழுந்தார். ஆடி இதில் காயமடைந்த ரவியை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தனர்.

அங்கு சிகிச்சையில் இருந்த ரவி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து நத்தம் போலீஸ் இன்ஸ்பெ சிவராமகிருஷ்ணன், சப்-இன்ஸ்பெக்டர் பொன் குணசேகர் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### செந்துறை அருகே

# அலங்கரிக்கபட்ட தேர்களில் புனித உத்திரியமாதா தேர்பவனி



**நத்தம், ஜூலை 18-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செந்துறை அருகே நல்லபிச்சன்பட்டியில் புனித உத்திரியமாதா திருவிழா கடந்த 14-ம் தேதி கொடி யேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி தினமும் நவநாள் திருப்பலிகளும், நேற்று முன்தினம் பொது பொங்கல் வைத்தல் நிகழ்ச்சியும் பங்குத்தந்தையர்கள் ஜெயசீலன், வின்சென்ட், மைக்கேல் ஆகியோர் தலைமையில் நடந்தது.

திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான புனித உத்திரிய மாதா புனிதர்களுடன் அலங்கரிக்கபட்ட தேர்களில் ஊர்வலமாக செல்லும் தேர் பவனி திருவிழா நேற்று மாலை நடந்தது. தொடர்ந்து கொடியிறக்கம் நிகழ்ச்சி நடந்தது. இதில் ஏராளமான கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை செந்துறை பங்குத்தந்தையர்கள் மற்றும் நல்ல பிச்சன்பட்டி கிளைப்பங்கு நிர்வாகிகள் செய்திருந்தனர்.

### வத்தலக்குண்டில்

# நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளர் பதவியேற்பு

**வத்தலகுண்டு, ஜூலை 18-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு உள்ள தமிழக அரசு நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளராக வி கே சி ஆனந்த் பதவி ஏற்றுள்ளார். இவர் இதற்கு முன்பு வேடசந்தூரில் பணிபுரிந்து தற்போது பணி மாறுதல் பெற்று வத்தலக்குண்டில் உதவி கோட்ட பொறியாளராக பதவி ஏற்றுள்ளார்.



வத்தலக்குண்டில் உள்ள நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளர் அலுவலகத்தில் உதவி பொறியாளர் தாமரை மாறன், கொடைரோடு உதவி பொறியாளர் சதீஷ்குமார் மற்றும் அனைத்து பணியாளர்கள் வரவேற்றார்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்தார்.



**திருவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவில் ஆடிப்பூரத் தேர்த்திருவிழா வருகின்ற 28.07.2025 அன்று நடைபெறுவதை முன்னிட்டு, தேர் செல்லும் வீதியினை மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, ஒவ்வொரு துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்தும், எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்து, அலுவலர்களுக்கு உரிய அறிவுரை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.**

### ஒட்டன்சத்திரத்திரம் பகுதியில்

# ரூ.320 கோடியில் வளர்ச்சி பணிகள்: அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு



**ஒட்டன்சத்திரம், ஜூலை 18-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட ஏ.பி.பி.நகர்விரிவாக்கப்பகுதி, ஆர்.எஸ்.பி.நகர், மார்க்கெட் பைபாஸ் சாலை ஆகிய பகுதிகளில் மழைநீர்வடிகால், சாலை பணிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, அங்கன்வாடி கட்டிடம் உள்ளிட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்று 50 மாத ஆட்சிகாலத்தில் ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் சுமார் ரூ. 320 கோடியில் திட்டப்பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளது. விட்டுப்போன பணிகள் அனைத்தும் விரைவில் நிறைவேற்றப்படும்.

குழந்தைவேலப்பர் கோவில் கிரிவலப்பாதை விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படாத திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார் என்று பேசினார். விழாவில் வட்டாட்சியர் சஞ்சய்காந்தி, நகராட்சிஆணையாளர் ஸ்வேதா, நகர்மன்ற தலைவர் திருமலைசாமி, நகர்மன்றதுணைத் தலைவர் வெள்ளைச்சாமி, நகர்மன்றஉறுப்பினர் கண்ணன், துணை வட்டாட்சியர் முருகேசன்,நகராட்சி பொறியாளர்சுப்ரமணியபிரபு, கணக்காளர்சரவணன், சுகாதாரஆய்வாளர் ராஜமோகன், முன்னாள்நகர் மன்ற உறுப்பினர்பாண்டியராஜன், அரசு ஒப்பந்ததாரர் வேலுச்சாமி,தகவல் தொழில் நுட்பஅணி நிர்வாகிகள் தினேஷ்குமார், இளமதி உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# பரமக்குடி - நயினார்கோயில் ஒன்றியங்களில் கலெக்டர் ஆய்வு



**பரமக்குடி, ஜூலை 18 -**

ராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் மற்றும் பரமக்குடி ஊராட்சி ஒன்றியங்களில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறறு வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் கடந்த 15 ஆம் தேதி உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை கடலூர் மாவட்டத்தில் துவக்கி வைத்தார்.அதனைத்தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் இத்திட்டம் தொடங்கப்பட்டு முகாம்கள் நடைபெற்று வருகின்றன. நகர்ப்புற, ஊரகப்புற மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தேதிகளில் அந்தந்தப் பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியம், காரடர்ந்தகுடி ஊராட்சி மற்றும் பரமக்குடி ஊராட்சி ஒன்றியம், மேலாய்க்குடி ஊராட்சி, தேவரேந்தல் கிராமத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை பார்வையிட்டதுடன் பொது மக்கள் மனுக்கள் வழங்கி வருவதை பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கைகள் தொடர்பாக கேட்டறிந்தார். முகாம்களில் பொது மக்கள் வருகையின்போது அவர்கள் அளிக்கும் மனுவினை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் சரிபார்த்து பெற்றுக்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதுடன், பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களை உரிய ஆவணங்களுடன் கணினியில் தாமதமின்றி உடனுக்குடன் பதிவு செய்திட வேண்டுமென அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது பரமக்குடி வட்டாட்சியர் வரதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தேவப்பிரியதர்ஷினி (நயினார்கோவில்), முத்துராமலிங்கம் (பரமக்குடி) மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



**காமராஜரின் பிறந்த நாளை முன்னிட்டு திருமங்கலம் தென்றல் அரிமா சங்கத்தின் சார்பில் ஆலம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் 90 பேருக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் கல்வி சார்ந்த உபகரணங்களும் பள்ளிக் கட்டிட பராமரிப்பு பணிக்கான நிதியும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் தென்றல் அரிமா சங்கத்தின் தலைவர் ராஜபிரபாகரன், செயலாளர் குழந்தைவேல், பொருளாளர் ஞானசீலன், ஒருங்கிணைப்பாளர் இளங்கோ மற்றும் உறுப்பினர்கள், ஆசிரியப் பெருமக்கள் கலந்து கொண்டனர்.**



● 37.00 கோடி ரூபாய் மொத்த பரிசுத்தொகை கொண்ட 2025-ம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமான முன்பதிவை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் கோப்பை விளையாட்டு போட்டி:

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்பதிவை தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூலை 18-

37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025-ம் ஆண்டு முதல்வர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கான முன்பதிவினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் பங்கேற்கும் வகையில் முதல்வர் கோப்பை விளையாட்டு போட்டிகளை நடத்தி வருகிறார்.

கடந்த 2024-ம் ஆண்டு முதல்வர் கோப்பைக்கான மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு 83.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்பாக நடத்தப்பட்டன. இந்த ஆண்டு (2025) முதல்வர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் அனைத்து மாவட்ட மற்றும் மண்டல அளவில் வருகின்ற 22.8.2025 முதல் 12.9.2025 வரை நடத்தப்படவுள்ளன.

முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் அனைவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான https://cmtrophy.sdat.in, https://sdat.tn.gov.in வாயிலாக 17.7.2025 முதல் முன்பதிவு செய்து தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். முன்பதிவு செய்திட கடைசி நாள் 16.8.2025 மாலை 6.00 மணி ஆகும்.

தனி நபர் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக 1 லட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். குழு போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா 75 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக தலா 50 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக தலா 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் சிறப்பு மதிப்பெண்கள் மற்றும் சலுகைகள் பெற இயலும். ஆடுகளம் தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 9514 000 777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் ஆணையருடன் தி.மு.க. எம்.பி.க்கள் சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 18-

டில்லியில் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை தி.மு.க. எம்.பி.க்கள் நேற்று (வியாழக்கிழமை) சந்தித்துப் பேசியுள்ளனர்.

தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளதையடுத்து வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக தி.மு.க. எம்.பி.க்கள் என்.ஆர்.இளங்கோ, டி.எம்.செல்வகணபதி, தங்கதமிழ்ச்செல்வன், முரசொலி, ராஜேஷ்குமார் ஆகியோர் இன்று டில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மற்றும் தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங், விவேக் ஜோஷி ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

அப்போது தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தம் நடைபெறும்போது ஆதார், ரேஷன் அட்டையை ஆவணமாகப் பெற வேண்டும் என தேர்தல் ஆணையரிடம் தி.மு.க. எம்.பி.க்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும் தேர்தல் தொடர்பான அனைத்து விதிமுறைகளும் ஹிந்தி, ஆங்கிலத்தில் இருப்பதுபோல தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளிலும் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



● மதுரை மாவட்டம், மாநகராட்சி மண்டலம்-1, ஆணையூர் வார்டு அலுவலகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று தொடங்கி வைத்து துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். மாவட்ட கலெக்டர் பிரவீன்குமார், உடன் உள்ளார்.



● சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக கூட்டரங்கில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், சுற்றுலா குறித்த மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக மேலாண்மை இயக்குநர் கிருஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக பொது மேலாளர் கவிதா மற்றும் துறைசார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி நேற்று சுற்றுப்பயணத்தின் ஒருபகுதியாக மயிலாடுதுறை மாவட்டத்தில் பிரச்சாரம் மேற்கொண்டார். அவர் கொள்ளிடம் ஆற்றைக்கடந்து, புத்தூர் வழியாக, சீர்காழி செல்லும் வரை வழிநெடுக அ.தி.மு.க. தொண்டர்கள், பொதுமக்கள் திரளாக வரவேற்பு அளித்தனர்.

### வடகிழக்கு பருவமழை தொடங்கும் முன்பே

# மழை நீர் வடிகால் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்

## அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஜூலை 18-

வடகிழக்குப் பருவமழைக் காலத்துக்கு முன்பே மழை நீர் வடிகால் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை பணிகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:- தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று (17.7.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் தமிழ்நாட்டிலுள்ள 25 மாநகராட்சிகள் 144 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதல்வர் தமிழ்நாட்டில் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு உட்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை விரைந்து நிறைவேற்றிட அறிவுறுத்தினார். குறிப்பாக, மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் சாலைப் பணிகள் ஆகியவற்றை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நகர்ப்புற உள்ளாட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், துப்புரவுப் பணி மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்புப் பணிகளை திறம்பட மேற்கொள்ள வேண்டும் என்றும், சட்டமன்ற அறிவிப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். அப்பணிகளை நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் நிறைவேற்றி, பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று அலுவலர்களை அறிவுறுத்தினார்.

கடந்த 4 ஆண்டுகளில் ரூ.8 ஆயிரம் கோடிக்கும் அதிகமான செலவில் 15 ஆயிரம் கிலோமீட்டருக்கும் அதிகமான சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளதையும், கடந்த 4 ஆண்டுகளில் நகர்ப்புற மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளான மெட்ரோ ரெயில் திட்டங்கள், புதிய குடிநீர்த் திட்டங்கள், மழைநீர் வடிகால் பணிகள் போன்ற பல்வேறு முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாநகராட்சிகளில் 3,199 பணிகளும், நகராட்சிகளில் 4,972 பணிகளும் தொடங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அப்போது முதல்வர், இப்பணிகள் அனைத்தையும் விரைவில் தொடங்கி, வடகிழக்குப் பருவமழைக் காலத்துக்கு முன்பே முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதேபோன்று, இறுதிக்கட்டத்தில் இருக்கின்ற பணிகள், பாதி முடிவுற்ற பணிகளையெல்லாம் போர்க்கால அடிப்படையில செய்து முடித்திட, மின் வாரியம், குடிநீர் வழங்கல் வாரியம், நெடுஞ்சாலைகள் துறை, மாநகராட்சி நிர்வாகங்கள் ஒருங்கிணைப்புடன் செயல்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று குறிப்பிட்டார்.

பருவமழைக் காலம் தொடங்குவதற்கு முன்பே மழைநீர் வடிகால்கள் சுத்தம் செய்யப்பட்டு தண்ணீர் வெளியேற வழி ஏற்படுத்த வேண்டும் என்றும், குறிப்பாகத் தாழ்வான பகுதிகள், வெள்ள அபாயம் இருக்கின்ற பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, முதலில் அங்கு பணிகளை முடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மாநகராட்சி ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# த.வெ.க.வின் மாநாடு குறித்து 50-க்கும் மேற்பட்ட கேள்விகள்

## மதுரை காவல்துறை எழுப்பியது

மதுரை, ஜூலை 18-

த.வெ.க.வின் 2-வது மாநில மாநாடு குறித்து சுமார் 50 கேள்விகளை காவல்துறையினர் எழுப்பியுள்ளனர்.

தமிழக வெற்றிக்கழகத்தை கடந்த ஆண்டு விஜய் தொடங்கினார். அந்த கட்சியின் முதல் மாநில மாநாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலை கிராமத்தில் நடந்தது.

தொடர்ந்து த.வெ.க.வின் 2-வது மாநில மாநாட்டை, மறைந்த தே.மு.தி.க. நிறுவனர் விஜயகாந்தின் பிறந்த நாளான ஆகஸ்டு 25-ந்தேதியன்று மதுரையில் நடத்த விஜய் திட்டமிட்டுள்ளார்.

இதையொட்டி மதுரை-தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை எலியார்பத்தி சுங்கச்சாவடி அருகே உள்ள பாரபத்தி பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தொடங்கி உள்ளன. மாநாட்டு திடல் 506 ஏக்கர் பரப்பளவில் அமைகிறது. பிரமாண்டமாக மாநாட்டை நடத்த முடிவு செய்துள்ளனர். மேலும் மாநாட்டுக்கு அனுமதியும், பாதுகாப்பும் கேட்டும், மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அரவிந்திடம் கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த் மனு அளித்தார்.

இந்த நிலையில், போக்குவரத்து சிக்கல்கள், விஜய் பயணிக்கும் வழிகள் என்ன?, மாநாட்டு இடத்தை தொண்டர்கள் அணுகுவது எவ்வாறு ?, யார் தலைமையில் மாநாடு நடைபெறுகிறது? எத்தனை தொண்டர்கள் பங்கேற்கிறார்கள்? என்பன உள்ளிட்ட சுமார் 50 கேள்விகளை காவல் துறையினர் எழுப்பியுள்ளனர்.

இந்த கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்களின் அடிப்படையில் மாநாட்டிற்கு அனுமதி வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும் என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



● மதுரை மாநகர் மாவட்ட மத்திய 2-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் வட்டச் செயலாளர் பி.பாரதிராஜா தலைமையில் பகுதி பொறுப்பாளர் அஸ்வின்குமார் முன்னிலையிலும் கரிமேடு மோதிலால் தெருவில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், புதூர் சந்திரன், மகேந்திரன்,தளபதி மாரியப்பன், மார்க்கெட் செந்தில்குமார், பஜார் துரைப்பாண்டி, மீன்பாண்டி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.